FREE ISSUE

என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்


# லண்டன் தமிழர் தகவல்

August 2014

London Tamil's Information




குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே

# இரண்டாவது உலகத் திருமுறைப் பெருவிழா
## இலண்டன் - 2014

# Second World Thirumurai Festival & Research Conference
## London - 2014



திருமுறை கண்ட மாமன்னன்
ராஜராஜசோழன்
ஆட்சிக் காலம் : 985 -1014 கிபி



திருமுறை வகுத்த அருளாளர்
நம்பியாண்டார் நம்பி


மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest


வண்டனில்
No1
நகை மாளிகை
Lakshmis Jewellers
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை




சம்பந்தர் அருள்பெற்ற சீர்காழித் திருக்கேவில்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்

19 September 2014 – 9:30 AM to 4:30 PM:
London Sivan Temple, 4A Clarendon Rise,
London SE13 5ES
20&21 September 2014 – 9:30 AM to 6:00 PM:
Sedgehill School Auditorium, Sedgehill Road,
London SE6 3QW

# SECOND WORLD THIRUMURAI FESTIVAL & RESEARCH CONFERENCE

## London - 2014

| | |
|---|---|
| Dr S. Jeyanathan | 07827914827 |
| Mr S J Fatimaharan | 07877302731 |
| Dr T Sriskandarajah | 07702518695 |
| Dr S Rajasundaram | 07868701503 |
| Mr K.V Kaneshamurthy | 07956854075 |
| Mr V R. Ramanathan | 07956369557 |
| Mr S Anandathiyagar | 07857292550 |
| Mr S Balasingham | 07956513669 |
| Dr K.Sivakumar | 07788415927 |
| Dr S Maheshwaran | 07725555572 |
| Dr Sharavanan Jeyanathan | 07598276275 |
| Mr Kumaran Sriskandarajah | 07960098402 |

Email:
tflondon2014@hotmail.com

For more details log on to:
www.thirumuraifestivallondon2014.com

## OUR MISSION:

Our aim is to espouse the inner purpose of thirumurai hymns to youngsters and enrol them into the incomparable cultural heritage that Saivism offers in our way of life.



**19th September 2014**
**9.30 AM - 4.30 PM**
**LONDON SIVAN TEMPLE**
**4A Clarendon Rise, Lewisham**
**London SE13 5ES**

**20 & 21 September 2014**
**9.30AM - 6.00 PM**
**SEDGEHILL SCHOOL AUDITORIUM**
**Sedgehill Road, Catford,**
**London SE6 3QW**

Tickets for all 3 days:
Reserved Seats: £50
Family: £30
Single: £15

**Refreshments included**


Niru BRAND®
Bringing
Great
Food
to Life.
Vegetable Briyani
Vada
Nelli
ICE Cream Soda
The No 1 Brand
Niru BRAND
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

தரமான தயாரிப்புகளையே
வாங்குங்கள்
என்றும் தரமானவை
திரு
தயாரிப்புகள்



# தமிழர் தகவல்
# Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்

திருவள்ளுவர் ஆண்டு 2045
நந்தன - ஆடி
மலர் : 12
இதழ் : 135
ஆகஸ்டு - 2014

முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ்அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com

படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே

4000 பிரதிகள்

தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!

தங்கம் என்று நினைத்ததும்
நினைவுக்கு வர வேண்டிய பெயர்
Tharani Jewellery
54 Ealing Road, Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 8902 6777



அதி குறைவான வட்டிக்கு
நகை அடகு பிடிக்கப்படும்

வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!

உ

# குறொய்டன் அருள்மிகு ஸ்ரீ சக்தி கணபதி ஆலயம்

21 Brigstock Road, Thornton Heath, Croydon Surrey CR7 7JJ Tel : 0208 689 3466



# 13ஆம் ஆண்டு மஹோற்சவ விஞ்ஞாபனம்

விநாயக அடியார்களே!

எல்லாம் வல்ல ஸ்ரீ கணபதி பெருமானின் 13ஆம் ஆண்டு மகோற்சவமானது நிகழும் மங்களகரமான ஜெய வருடம் ஆவணித் திங்கள் 4ம் நாள் (20.08.2014) புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆவணித் திங்கள் 13ஆம் நாள் (29.08.2014) சதுர்த்தி திதி, வெள்ளிக் கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் தொடர்ந்து தீர்த்தத் திருவிழா, பூங்காவனம், திருவூஞ்சல், பைரவர் மடையுடன் இனிதே நடைபெற திருவருள் கூடியுள்ளது.

## நிகழ்ச்சி நிரல்

| திகதி | காலை | மாலை |
|---|---|---|
| 19.08.14 செவ்வாய் | கணபதி ஹோமம் | தேவதானுக்ஞை, பூர்வாங்க கிரியைகள் |
| 20.08.14 புதன் | 7.00 மணி முதல் அபிஷேகம், நித்திய பூஜை, பேரிதாடனம், வசந்த மண்டப பூஜை மற்றும் 11.00 மணி கொடியேற்றம் (துவஜாரோஹனம்) | 6.00 மணி முதல் யாக பூஜை, நித்திய பூஜை, தம்ப பூஜை, வசந்த மண்டப பூஜை மற்றும் திருவீதி உலா |
| 21.08.14 வியாழன் முதல் 28.08.14 வியாழன் வரை | 10.00 மணி 21 கலச திரவிய அபிஷேகம், நித்திய பூஜை, தம்ப பூஜை 12.00 மணி வசந்த மண்டப பூஜை, திருவீதி உலா | 6.00 மணி நித்திய பூஜை, தம்ப பூஜை 7.00 மணி கலை நிகழ்ச்சிகள் 8.00 மணி வசந்த மண்டப பூஜை, திருவீதி உலா |
| 24.08.14 ஞாயிறு | | மாம்பழத் திருவிழா |
| 26.08.14 செவ்வாய் | | வேட்டைத் திருவிழா |
| 28.08.14 வியாழன் | | சப்பரத் திருவிழா |
| 29.08.14 வெள்ளி | ஆவணிச் சதுர்த்தி 10.00 மணி 108 சங்காபிஷேகம் | 5.00 மணி தேர்த்திருவிழா |
| 30.08.14 சனி | 11.30 மணி தீர்த்தத் திருவிழா (வெளிவீதியில் தீர்த்தத்தடாகத்தில்) | 8.00 மணி கொடியிறக்கம் (துவஜாவரோஹனம்) |
| 31.08.14 ஞாயிறு | 21 கலச திரவிய அபிஷேகம் | பூங்காவனம் |
| 01.09.14 திங்கள் | 21 கலச திரவிய அபிஷேகம் | திருவூஞ்சல் |
| 02.09.14 செவ்வாய் | 21 கலச திரவிய அபிஷேகம் | வைரவர் மடை |

*அடியார்கள் அனைவரும் காலையும் மாலையும் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகைத் தந்து ஸ்ரீ சக்தி கணபதிப் பெருமானின் பேரருளை பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

**ஆலய குருமார்கள், அறங்காவலர் சபையினர், நிர்வாகத்தினர், உபயகாரர்கள் மற்றும் அடியார்கள்**

LycaFly
Travel the world for less

Call us now 0207 132 32 32
or visit www.Lycafly.com

THE MOST POPULAR AGENT OF SRILANKANS



£50 Free
Lycamobile top-up
with every single return ticket to
Colombo



T&C apply

SriLankan Airlines
Non stop flights to Colombo
fr £205 + taxes

OMAN AIR · QATAR AIRWAYS · BRITISH AIRWAYS

We work with over 160 airlines

**Best deals of the week**

| | | |
|---|---|---|
| New York | fr | £439 |
| Chennai | fr | £441 |
| Dubai | fr | £298 |
| Singapore | fr | £488 |
| Bangkok | fr | £457 |
| Toronto | fr | £444 |
| Melbourne | fr | £670 |

Incl Taxes


WEMBLEY
14 Ealing Road, Wembley,
London HA0 4TL · 0207 132 0055

EAST HAM
180 High Street North,
East Ham E6 2JA · 0207 132 0056

TOOTING
232 Upper Tooting Road,
London SW17 7EW · 0207 132 0057

MILTON KEYNES
16 Stratford Road MK12 5LJ
0207 993 6355 / 0190 322 7562

IATA








இந்த இடத்தில்


நீங்கள்

விளம்பரம் செய்ய

மாதம்

£ 30 மட்டுமே





மீண்டும்
புதுபொலிவுடன்
MITHUS
MITHUS Jewellers
322-324 London Road
Croydon CR0 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792




DOSA
LOUNGE
A Taste of Pure Spice Heaven
SRI LANKAN & SOUTH INDIAN
RESTAURANT AND TAKE AWAY
ALL VEGETARIAN FOODS ARE COOKED SEPARATELY IN OUR VEGETARIAN KITCHEN AND SERVED ON SEPARATE PLATES
PARTY/ FUNCTION HALL
AVAILABLE FOR HIRE.
SMALL HALL UP TO 35 SEATS,
BIG HALL UP TO 120 SEATS
FREE DELIVERY (6PM TO 10PM) WITHIN 3 MILES RADIUS MINIMUM ORDER OF £20.00
OUTDOOR CATERING FOR PARTIES, FUNCTIONS ETC AVAILABLE
OPENING TIMES
MONDAY – SUNDAY
11AM – 11PM
திங்கள் அன்று விடுமுறை
Tel: 020 8684 6661
5-7 St.James's Road, West Croydon, CR0 2SB
www.dosalounge.co.uk




Rathy Jewellers Ltd
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்
The Leading Jewellery Store in London with the Largest Selection including Diamond Jewellery, Thaali Kodi and all Studded Jewellery
Opening Hours
Mon-Sat 10 am to 6.30 pm
Sun 12 Noon to 6.30 pm
WEMBLEY BRANCH
28 Ealing Road, Wembley
Middlesex HA0 4 TL, 020 8903 3063
TOOTING BRANCH
209 Upper Tooting Road
Tooting SW 17 7TG, 020 8682 2233
எங்களிடம் வரும் பழைய நகைகள் புதுப்பிக்கப்பட்ட
பின்னர் தான் மீளத் தயாரிக்கப்படுகிறது அதனால்
எல்லா நகைகளுக்கும் 22கரட் சரியாக இருக்கும்

# Thinesh

**Jewellers & Textiles**

276, Lewisham High Street
Lewisham
London SE 13, 6JZ
Tel : 020 8613 9569
www.thinesh-jt.com



லூசியத்தில்
தரமான
நகைக்கடை

Book typing and layout
*(English and Tamil)*
Book & Wrapper Design
Brochure Design
and Printing
Contact
ambika.siva5@gmail.com

அழைப்பிதழ்கள், நூல்கள், இதழ்கள்
வடிவமைக்க...
சிறந்த முறையில்
அச்சிட....
தொடர்பு கொள்ளுங்கள்
ambika.siva5@gmail.com

Ilford பகுதியில் புதிய பல்பொருள் அங்காடி

# SRI STORE

இது காலமும் SRI FOOD & WINE
என்ற பெயரில் இயங்கிய எமது கடை
புதிய பெயரில் தொடர்ந்து தங்கள் சேவைக்காக

**396-400 Ilford Lane Town Centre Ilford, IG1 2NB**
**Tel : 020 8553 7737**





# மரியாதை செய்யப்பட்ட
# சிறீமதி சிவசக்தி சிவநேசன்



லூசியத்தில் கௌரவ விழாவுக்கான அழைப்பு எனக்குக் கிடைக்கப் பெற்றதும் இன்னொரு நிகழ்வுக்குச் செல்ல இருந்த யான் கரும்புத் தின்னக் கைகூலி வேண்டுமா சனிக்கிழமை சிவதரிசனம் காணும் பாக்கியம் கிடைக்குமா என்று விரைந்தேன். அப்பர்பிரான் கூறுவது போல் ஒருக்காலும் திருக்கோயில் சூழாராகில் கோயில் என்ரலி கோ உறையும் இல்லம் கோ என்றால் அது சிவபெருமானே தான் என மணிவாசகர் விண்ணுக்கு ஒரு மருந்து என்று வாழ்த்துவார்.

அண்ணமலையான் உண்ணமுலையாள் இருவரதும் கண் கொள்லாக் காட்சி. கோயில் வலம் வந்த பின் கௌரவ விழாவுக்குச் செல்ல முடிந்தது. மேடையில் ஆறேழு ஆண்கட்கு மத்தியில் அன்னையின் அம்சங்கள் பொருந்திய சிறீமதி சிவசக்தி சிவநேசன் அமர்ந்திருந்தமை ஏட்டையும் பெண்கள் தொடுவதில்லை என்று எண்ணி இருந்தவர் மாண்டு விட்டார் என்ற பாரதியாரின் பாடல் தான் நினைவு வந்தது.

அவரின் சிறப்புகளையும் தொண்டுகளையும் திரு சிறீரங்கன் சிறப்புரையாற்றினார்.

திருமதி சிறீமதி சிவசக்தி சிவநேசன் பாரதிய வித்யபவன் இன் முதுகெலும்பு போன்வர் மட்டுமல்ல இலங்கையில் உள்ள சிவபூமி மனநலம் குன்றிய குழந்தைகளின் ஆசிரியர்கள் பதினெண்ட்ருக்கு தனது கடின உழைப்பை ஊதியமாக மாதார்தம் அனுப்பிக் கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. அவரிடம் கல்விகற்கும் குழந்தைகளை அன்புடன் அரவணைத்து தான் கற்றகல்வியை கள்ளங்கபடம் இல்லாது கற்றுக் கொடுக்கும் கருணை மனம் கொண்டவர். ஆனால் மிகுந்த கண்டிப்புடன் தொழிலாற்றுவார். குழந்தைகள் அழுதால் my darling என்று நீவி விடுவார். கலாசாரப் பற்றுக் கொண்ட இவர் குழந்தைகளின் ஆடை அணிகலன் பொட்டு இவற்றில் மிகுந்த கவனம் செலுத்துவது உண்டு. இவருடைய கலைத்தொண்டு தன்னுடைய மாணவர்களுக்கு மட்டுமன்றி அனைத்து கலைமாணவர்களும் பயன்பெறும் விதத்தில் சங்கீதக் குறுந்தகடுகள் பல வெளியிட்டுள்ளார். Karnatic vocal music voyage 1 to 5 (v) VARNAMALIKA 1 to 3 ragam thanam 1 to 2 சங்கீதாஞ்சலி, சாரதாஞ்சலி. சக்தி மந்திரம் முருகன் சூர்த்தனைகள் என்பனவாகும். தான் அந்த மேடையில் நிற்பது இசையைத் தனக்களித்த இறைவனாலும் தந்தை மகர்காற்றும் நன்றி அனவபத்து முந்தியிருப்பச்செயல் என்பதற்கிணங்க தனது தந்தை தாயாலும் என்று அவையடக்கத்துடன் உரையாற்றிமை எனது மனத்தில் அவருக்கு ஒரு தனிமரியாதையை ஏற்படுத்தியது. அவருக்கு சர்வதேச இந்து இளைஞர் பேரவை கலைச் சுடரொளி எனக் கௌரவமளித்து பாராட்டியமை சாலவும் பொருத்தமானது அவர் நமது சமூகத்திற்கு மேலும் பல சேவை புரிய எல்லாம் வல்ல கூத்தப்பெருமானின் பாதம் பற்றி பல்லாண்டு வாழ்க என வாழ்த்துவோமாக

வாழ்க சிவசக்தி, சிவநேசன்,

வளர்க அவர் இசைப்பணி

தொகுத்தளித்தவர்

திருவாசகத் தென்றல் திருமதி
அரியமலர் உதயகுமார்

# திருமுறைகள் மாநாடு சிறக்கட்டும்!
# சைவ நெறி செழித்து வளரட்டும்!!

தகவல் தொடங்கிய காலத்தில் இருந்து வலியுறுத்தி வந்த ஒரு கடமையை, இனிமேலாவது செய்வது என்று தீர்மானித்துள்ள நண்பர்களுக்கு முதலில் நன்றியினையும், வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். சைவக் கோயில்களில், கட்டாயம் ஓதுவார்களைக் கொண்டு திருமுறைகளைப் பாடச் செய்ய வேண்டும் என்று தமிழர் தகவல் மூலமாகத் தொடர்ந்து சொல்லி வந்தேன். அதற்கு யாரும் செவி சாய்க்கவில்லை என்னும் வேதனையும் எனக்குள் இருந்து வந்தது. இன்று அந்த வேதனை சற்றே குறைந்துள்ளது.

லண்டனில் திருமுறைகள் மாநாடு நடத்துவது என்று தீர்மானித்திருக்கிறார்கள். அதற்கென அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவினர் அது தொடர்பாக சில கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றனர். அதில் ஒன்று, "சைவத் திருக்கோயில் வழிபாடுகளிலும், வீட்டிலும் திருமுறைகள் ஓதும் பழக்கத்தைப் பழக்கமாக்க முயற்சித்தல்" என்பது. வரவேற்கப்பட வேண்டிய கோரிக்கை. இந்த முயற்சியைப் பத்தாண்டுகளுக்கு முன்பே தொடங்கியிருந்தால், இன்று வழிபாட்டு இடங்களிலும், வீடுகளிலும் திருமுறைகள் ஓதுவது நடைமுறையாகி இருக்கும். காலம்கடந்த முயற்சி என்றாலும், மகிழ்ச்சியோடு வரவேற்போம். செயல்படுத்துவோம்.


அந்தக் கோரிக்கைகள் திருமுறைகள் ஓதுவது குறித்துப் பேசுகின்றன என்றாலும், கோயில்களில் ஓதுவார்களை நியமிப்பது குறித்து எந்த வரிகளும் இல்லை. ஒவ்வொரு கோயில்களிலும் மூன்று நான்கு அர்ச்சகர்கள் நியமிக்கப்பட்டு பூசைகள் செய்யப்படுகின்றன. ஆனால் சைவக் கோயிலுக்குரிய திருமுறைகள் ஓதுவதற்கான ஓதுவார் ஒருவர் கூட இல்லை. இதை முதலில் கவனத்தில் கொள்ள வேண்டும். அப்போதுதான், கோயில்களுக்கு வரும் பக்தர்கள், ஓதுவார்கள் இசையோடு தேவாரம், திருவாசகம் ஓதுவதைக் கேட்டு, அதை வீட்டிலும் இசையோடு பாடுவதற்கு உதவும். மீண்டும் சைவ மக்களின் வீடுகளில், இசையோடு கூடிய திருமுறைகள் ஒலிக்கும். இங்கு வரும் சினிமாக்காரர்களுக்குப் பணத்தைக் கொட்டி அழும் மக்கள், திருமுறைகள் மாநாட்டிற்குத் தாராளமாக நிதி வழங்க முன்வரவேண்டும். ஆனால், அதற்கு மட்டும் ஆயிரத்தெட்டுக் கேள்விகள் கேட்கின்றனர். எத்தனையோ சினிமாக்களில், திருமுறைப் பாடல்களை எடுத்துப் போட்டிருக்கிறார்கள். சமய இலக்கியங்களிலேயே, பண்ணோடு கூடிய பாடல்களைக் கொண்டவை சைவ இலக்கியங்கள்தாம் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. 'குனித்த புருவமும் கோவை செவ்வாயிற் குமின் சிரிப்பும்' என்ற தளபதி படத்தில் வரும் வரிகள், தேவாரப் பாடலின் வரிகள் என்பது நம் பிள்ளைகளில் எத்தனை பேருக்குத் தெரியும்? இந்நிலை மாற வேண்டும். இனியாவது, சைவ மக்களாகிய நம்முடைய கடமையை உணர்ந்து, திருமுறைகளை இசையோடு ஓதுவதற்கு முன்வரவேண்டும்.

கோயில்களில் ஓதுவார்களை நியமித்து, திருமுறைகளை ஒலிக்கச் செய்வதோடு, அவர்களைக் கொண்டே, நம் பிள்ளைகளுக்கு வகுப்புகளும் எடுக்கச் செய்தால் மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. இதையும் திருமுறைகள் மாநாட்டுக் குழு பரிசீலிக்க வேண்டும். வாரத்தின் இறுதி நாளான ஞாயிறு அன்று பிள்ளைகளை திருமுறை வகுப்புகளுக்கு அனுப்பக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

திருமுறைகள் மாநாடு நடத்துவதும், கோயில்களிலும், வீடுகளிலும் திருமுறைகள் ஓதப்பட வேண்டும் என்னும் கோரிக்கையும் நூறு சதவீதம் ஏற்புடையவை என்பதால், தமிழர் தகவல் மாநாட்டை வாழ்த்துவதோடு, மாநாடு சிறப்பாக நடப்பதற்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பை நல்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின்
கீழ் இருக்க"

# சைவத் திருமுறைகளின் பெருமை



சைவத் திருமுறைகள், சைவ சமயத்தின் அடிப்படைப் பிரமாண நூல்கள். திருமுறை என்பது சைவத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானின் பெருமையைப் போற்றியும் வாழ்த்தியும்; ஏத்தி ஏத்தித் தொழுதும் நாயன்மார்களினால் பாடப் பெற்ற அருட் பாடல்களை உள்ளடக்கிய திருநூல்களின் தொகுப்பு ஆகும். திருமுறைகளின் தொகை பன்னிரண்டு.

இவற்றை மனம், மொழி, மெய்த்தூய்மையுடன், காதலித்து மெய்யன்போடு ஓதி வருபவர்களின் இவ்வுலக வாழ்க்கை, நன்னெறியில் அமைவதோடு; அமைதியும் இன்பமும், சீரும் சிறப்பும் பெற்றுத் திகழும் என்பது முடிந்த முடிவு ஆகும். அத்துடன் மனிதப் பிறவியின் இறுதி இலக்கு ஆகிய முத்தியின்பமும் கைகூடும் என்பது உறுதி.

பன்னிரு திருமுறைகள் தெய்வத்தன்மை பொருந்தியவை. அவற்றை அருளிச் செய்தவர்களும் திருவருட் செல்வர்கள். வேதம் வடமொழியில் உள்ளது; இறைவனால் அருளப்பெற்றது.

திருமுறைகள் தமிழ் வேதம்; இறைவன் தமது அடியார்கள் வாயிலாக அருளியவை. அவற்றுள் முதல் மூன்று தொகுதிகளில் திருஞான சம்பந்தர் பாடிய தேவாரப் பதிகங்களும்; அடுத்து வருகின்ற மூன்று தொகுதிகளிலும் திருநாவுக்கரசர் அருளிச் செய்த தேவாரத் திருப் பாடல்களும்; ஏழாவது தொகுதியில் சுந்தரரின் தேவாரப் பதிகங்களும் இடம்பெற்றுள்ளன.

எட்டாந் திருமுறையில் மாணிக்கவாசகரின் திருவாசகமும் திருக்கோவையாரும் வைக்கப்பட்டுள்ளன. திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களை ஒன்பது பேர் அருளிச் செய்துள்ளனர்.

அவை ஒன்பதாந் திருமுறையில் உள்ளடக்கப் பெற்றுள்ளன. பத்தாந் திருமுறையாக விளங்குவது திருமூலரால் அருளப்பெற்ற திருமந்திரம் என்னும் தோத்திர, சாத்திர நூல். பதினொராந் திருமுறையில் நாற்பது நூல்கள் அடங்குகின்றன. அவற்றை அருளியவர்கள் பன்னிருவர். அவை பிரபந்தங்கள் வகையை சேர்ந்தவை. சேக்கிழார் இயற்றிய திருத் தொண்டர் புராணம் எனும் பெரிய புராணம் பன்னிரண்டாந் திருமுறையாகும்.

இறைவனை அடைவதற்கு நான்கு வழிகள் உள்ளன என்றும் அவை முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நெறிகள் என்றும் திருமுறைகள் எடுத்துரைக்கின்றன. வையத்துள் மனிதர்கள் வாழ்வாங்கு வாழவும், நல்ல வண்ணம் வாழவும்; இறையுணர்வு பெறவும்; அறம், பொருள், இன்பம், வீடு என்னும் மனித வாழ்க்கைப் பயன்களை அடையவும் அவர்களுக்கு உறுதுணையாக விளங்குபவை திருமுறைகள் ஆகும்.

குறிக்கோள்களை வகுக்கவும்; அவற்றை அடைவதற்கான வழிமுறைகள், செயன்முறைகள் என்பவற்றை நீதி வழுவா நெறிமுறையில் அமைத்துக் கொள்ளவும்; ஆன்மிக, ஒழுக்க விழுமியங்களை உணர்த்தவும்; புன்னெறியதனிற் செல்லும் போக்கினை மாற்றி, மேலாம் நன்னெறியதனில் வாழ்க்கையை இட்டுச் செல்ல வழிப்படுத்தியும், திருமுறைகள் மனிதர்களுக்கு உதவுகின்ற வகையில், வாழ்வியல் நூல்களாக அவை விளங்குகின்றன.

ஆன்மிகமும் உலகியலும் ஒன்றிற்கொன்று முரணானவை அல்ல; அவை ஒன்றுடன் ஒன்று இணைய வேண்டியவை; இணையக் கூடியவை; அதுவே சைவநீதி என உணர்த்துகிறது சைவ நெறி. அவை இரண்டின் இணைப்பின் பயனாகவே தனிமனித அமைதி, சமூக அமைதி, உலக அமைதி என்பன ஏற்பட வழி பிறக்கும். திருமுறைகளின் மகிமையும் வலிமையும் சொல்லில் அடங்காதவை.

'திருமுறையே சைவநெறிக் கருவூலம்; தென் தமிழின் தேன்பாகு,' என்கிறது சிதம்பர தலத்துத் தனிப்பாடல் ஒன்று.

சிவனுக்குத் திருமுறைத் தமிழ்ப் பாமாலைகளைப் புனைந்து ஏத்தி வழிபட்டே நாயன்மார்கள் கற்பனைக்கும் எட்டாத அற்புதங்களை நிகழ்த்தினர். அத்துணை நலமும் முத்தியும் பெற்றனர்.

மனிதரை மனிதத் தன்மைகள், பண்புகளுடனான மனிதர் ஆக்கும் வலுவும் திறனும் திருமுறைகளுக்கு உண்டு. திருமுறைகளைப் புறக்கணித்தவர், சீராக வாழ மறுப்பவர் ஆகின்றார். இன்றைய மனிதர்கள் அனுபவிக்கும் உடல், உள ரீதியான வலியும், பெற்றுக் கொண்ட வடுக்களும், திருமுறைகளையும் அவை காட்டும் வாழ்க்கை அறங்களையும் முற்றிலாகக் கைவிட்டமையால் ஏற்பட்ட விளைவுகளே என்பதைக் காலங்கடந்த நிலையிலாவது நாம் உணர்ந்துகொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம்.

'வரைவிலா நலமே தருகின்ற திருமுறைகளின்
பெருமை போற்றிப் பேணாமையே
தமிழரெனச் சைவரெனப் பேர் சொல்லிப்
பேதையராய் வாழ்கின்ற தாழ்வுக்கும் அழிவுக்கும்
அறியாமைத் திமிருக்கும்
பெரிதான காரணமாகும்' என்னும் 'சாமிஜி' அவர்களின் கவிதைக்கூற்று சிந்தனைக்குரியது. எனவே, கோயில்களிலும், இல்லங்களிலும், பாடசாலைகளிலும் மற்றும் பொதுப்பணி மன்றங்களிலும் பூசை ஆராதனைகளிலும், பிரார்த்தனைகளிலும் திருமுறைகளை மெய்யன்போடு பாராயணம் பண்ணிவர, பக்தி தளைக்கும் அதன் பயனாக, வந்த கொடு வினையும் அவற்றால் ஏற்படும் துன்பங்கள், துயர்கள், அழிவுகள், அனர்த்தங்கள் அனைத்தும் நீங்கிவிடும் என்பது உறுதி.

'முத்தி நெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப், பத்திநெறியறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்' செய்த இறைவனைத் துதித்துத் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகப் பெருமான் மேற்படி கூற்றை உறுதி செய்துள்ளார்.

திருமுறைப் பாடல்கள் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலைச் செய்தமை பற்றிச் சமயகுரவர் வரலாறு கூறுவதைப் பெரிய புராணத்தில் காணலாம். திருமுறைகளை ஓதினார்க்கு நோய் நீக்கம், அகால மரண நீக்கம், செல்வப் பெருக்கம், ஞானப் பெருக்கம், உடல் நலம், மன நலம், நீளாயுள், உயிர் நலம், வாழ்க்கை வளங்கள், அறிவு நலம், ஒழுக்க மேன்மை, உயர் புகழ் அனைத்தும் கிடைக்கப் பெற்றுள்ளமைக்குச் சான்றுகள் உண்டு. திருமுறைகளை ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் என்றும்; அவற்றை ஓதாத நாட்களும் அவை பற்றிப்பேசாத நாட்களும் நாம் பிறவாத நாட்களேயாகும் என்றும் அருளாளர்கள் கூறியுள்ளனர்.

தேவார, திருவாசகம் முதலிய திருமுறைகள், பஞ்சாட்சர மந்திரத்தையும் சகல மந்திரப் பொருள்களையும் உள்ளடக்கி நின்று சித்தியும் முத்தியும் அருளும் மகாமந்திர வடிவமாக உள்ளமையினால், திருமுறைகளில் சிவபெருமானின் விளக்கம் நித்தியமானது என்பது அறிஞர் முடிபு. எனவே, திருமுறைகளும், வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உரியவையாகும். தேவாரம் முதலிய திருமுறைகள் ஆன்மாக்களுக்குப் பிறவிப் பிணி தீர்த்து முத்தியைக் கொடுக்க

வல்லன.

தேவாரம் முதலிய திருமுறைப் பாடல்களைப் பாடும் போது, பண்ணோடு இசைக்க வேண்டியது இன்றியமையாதது. 'தமிழோடிசை பாடல் மறந்தறியேன்' என்பது அப்பர் வாக்கு. தமிழ் மறையாகிய தேவாரப் பதிகங்களை ஓதுபவர்கள் பெறும் பலன்கள் அவ்வப் பதிகங்களினிடத்தே உரைத்து அருளப்பட்டுள்ளன.

பஞ்ச புராணம் என்பதில் முதல் ஏழு திருமுறை களில் உள்ள தேவாரம்; எட்டாந் திருமுறையிலுள்ள திருவிசைப்பா, திருப்பல்லாண்டு; மற்றும் பன்னிரண்டாந் திருமுறையான பெரிய புராணம் எனும் இவ்வைந்தினுமுள்ள ஐந்து தோத்திரங்கள், வரிசைக் கிரமத்தில் இடம்பெறும். பஞ்ச தோத்திரம் எனவும் அழைப்பர்.

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் என்பவற்றிற்கு மட்டுமே பண் வகுக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிவம் (அன்பு) பெருக்கி; சிந்தனையைச், சொல்லை, செயலைத் தூய்மை செய்து; அதனால் ஏற்றமுற்ற வளமான வாழ்வு அமைய; அல்லல்கள், அவலங்கள், பேதங்கள், வேற்றுமைகள் அமைதியின்மை, அந்தரங்கள், பரபரப்பு, ஏக்கங்கள், வேகம் வெறுப்புணர்வு, சந்தேக விபரீதங்கள் அனைத்தும் அடியோடு நீங்கி விடும். அமைதி, பரஸ்பர நம்பிக்கை, புரிந்துணர்வு, மனித நேயம், ஆனந்தம், ஐக்கியம், நல்லறுவு, மகிழ்ச்சி என்பன மலர்ச்சி பெறும். திருமுறைகளை நம்பினார் கெடுவதில்லை என்பது நான்கு மறை தீர்ப்பு.

மானுடத்தின் உயிர் நாடி, மெய்யியல் கருவூலம், பக்திப் பெருவெள்ளம், ஆன்மிக விழுமியங்களின் ஊற்றுக்கண் எனத் திகழும் சைவத் திருமுறைகள், எமது சொந்த முதுசொத்துக்கள். 'நல்லதோர் வீணை செய்தே, அதைப் புழுதியில் நலங்கெட விடலாமா?' ஆகாது.

தேமருத் திருமுறைத் தமிழோசை உலகமெலாம் பரவும் வழி செய்ய வேண்டும். திருமுறைகளை ஓதுதல், ஓதுவித்தல், பரப்புதல், அதன் புகழ் பேசுதல், திருமுறை ரு பஞ்ச புராண தோத்திரத் திரட்டு நூல்களை அச்சேற்றி வெளியிடுதல், பாடிப்பரவ ஊக்குவித்தல், பஞ்ச புராண தோத்திர நூல்களைத் தானமாக வறிய பிள்ளைகளுக்கு வழங்குதல் என்பன புண்ணியச் செயல்கள் ஆகும்.

அந்த வகையில், லேக் ஹவுஸ் இந்து மன்றம் அதன் கன்னி முயற்சியாக, 'பஞ்ச புராண தோத்திரத் திரட்டு' எனும் திருநூலை வெளியிட்டுள்ளது. அதனால் புண்ணியம் சேர்த்துள்ளது. இது சிறந்த சிவதொண்டும் ஆகும். 'தவமும் தவமுடையோர்க்காகும்' என்பது போலத் தொண்டு செய்வதற்கும், புண்ணியம் வேண்டும். இத்திருநூலின் சிறப்பு என்னவெனில், திருமுறைப் பாசுரங்கள் அனைத்திற்கும், யாவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய எளிய, இனிய தமிழில் விளக்கவுரை பொழிப்பாகத் தந்துள்ளமை என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லித்தான் ஆக வேண்டும். 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்

பல்லோரும் ஏத்தப்பணிந்து'

என்பது மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாக்கு.

சொற்குற்றம், பொருட் குற்றம், இலக்கணக் குற்றம் நேராது திருப்பாடல்கள் ஓதப்பட வேண்டும். அதற்குப் பாட்டின் பொருள் உணர்ந்திருத்தல் அவசியமாகும். 'பஞ்ச புராண தோத்திரத் திரட்டு' எனும் இந்நூலின் தொகுப்பாசிரியரும் உரையாசிரியரும் ஆக விளங்குபவர் கலாபூஷணம், சைவப் புலவர் சு.செல்லத்துரை ஆவார். அவர் தம் பணியைப் போற்றுதற்குரிய வகையில் செய்துள்ளமை பாராட்டக்குரியது.

இந்நூலை அச்சேற்றி வெளியிட்ட லேக்ஹவுஸ் இந்து மன்றத்தினர் தலைவர், செயலாளர், பொருளாளர், குறிப்பாக சிவப்பணியொன் மிகவும் தேவைப்பட்ட நேரத்தில் செய்துள்ளனர். பாராட்டுக்கும் போற்றுதற்கும் உரியவர்கள்.

நன்றி:

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்



# சைவ சித்தாந்தத்துக்கு வித்து

முனைவர் **கோ.ந. முத்துக்குமாரசுவாமி**

இறைக்கும் உயிருக்கும் இடையே உள்ள சம்பந்தத்தை இந்தியதத்துவ ஞானம் அத்துவிதம் என்று மொழியும். அத்துவித சம்பந்தத்தை இந்துசமயதத்துவங்கள் உவமைகள் வாயிலாக விளக்கம் செய்கின்றன. சைவசித்தாந்தத்திற்கு அத்துவிதம் குறித்துத் தனிக் கோட்பாடு உண்டு. அதன் அடிப்படை திருக்குறள், திருஞானசம்பந்தப் பெருமான் முதலாய திருமுறை ஆசிரியர்களின் திருப்பதிகங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டது.

### அகர முதல்

அனைவரும் அறிந்த திருக்குறள் கடவுள் வாழ்த்து முதற்பா "அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு". தெய்வப்புலவரின் இந்தக் குறளின் முதலடியைனை வழி மொழிந்து திருஞான சம்பந்தரும் 'அகர முதலானை அணியாப்பனூரானை' என மொழிந்தார்.

கடவுள் வாழ்த்து முதற் குறளில், 'அகர முதல' என்ற தொடரில் 'முதல' என்னும் சொல்லாட்சி சிறப்பான பொருள் உடையது. 'முதல' என்பதற்கு, எழுத்துக்கள் வரிசை முறையில் அகரத்தை முதலாக உடையன என்பதன்று இதன்பொருள்.

ஒருவன் ஒரு தொழில் தொடங்குவதற்குச் சிறிது பொருளை முதலீடு செய்கின்றான். அந்தப் பொருள் பின்னர் வளர்ந்து பல்கிப் பெருகுகின்றது. முதலீடு செய்த பொருள், பெருகிய பொருளில் கலந்து மறைந்து நிற்கின்றது. தொழிலில் பெருகிய செல்வம் புலப்படுகின்றதன்றி முதலீடு செய்த பொருள் புலப்படுவதில்லை. அந்த முதலீடு செய்த பொருளே' முதல்' எனப்படும்.

ஒருவன் வாயைத் திறந்தால் இயல்பாக எழும் ஒலி 'அ' அல்லது அதன் நீட்டமான 'ஆ' வாகும். இந்த அகரமே எல்லா எழுத்துக்களுக்கும் முதல். இந்த அகரம் உயிரெழுத்து, மெய்யெழுத்து ஆகிய எல்லா எழுத்துக்களிலும் கலந்து அவ்வவ்வெழுத்துக்களை இயக்கி அவ்வெவ் வெழுத்தாகவே இருக்கும். மெய்யெழுத்துக்கள் அகரவொலியுடன் கூடியே ஒலிக்க வேண்டும். "மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" என்பது தொல்காப்பிய விதி. எனவே, மெய்யெழுத்துக்களில் உயிர்கலந்து நிற்றலை எளிதாக அறியலாம். உயிரெழுத்துக்களில் அகரவுயிர் கலந்து நிற்றல் உய்த்துணர்வு உடையோருக்கே புலனாகும்.

### அகரவுயிருடன் பிற எழுத்துக்களின் மூவகைச் சம்பந்தம்

அதாவது அகரவுயிர், அனைத்து உயிரெழுத்துக்களுடனும் தனி மெய்யெழுத்துக்களுடனும் கலந்து அவற்றின் தன்மையேயாய் நிற்கும்.

சுருங்கச் சொன்னால், அகரவுயிர் தனித்துத் தானே இயங்கும்; பிற உயிர், மெய்யெழுத்துக்களுடன் உடனாகி அவற்றை இயக்கும்; அவற்றுடன் கலந்து நின்று அவையாகவே இருக்கும்.

### அகர உயிரும் சிவமும்

அகரவுயிர் மெய்யெழுத்துக்களோடு கூடி மெய்யெழுத்தின் ஒலியைப் பிறப்பித்தல் தெளிவாகப் புலப்படுதல்போல உயிரெழுத்துக்களுடன் கூடி அவ்வவ்வுயிரொலியைப் பிறப்பித்தல் தெளிவாக அறிய இயலுவதில்லை. நுண்ணறிவுடையோர் அதனை உய்த்து உணர்வர். அதேபோல் இறைவன் உயிர்களுடன் உயிருக்குயிராக நிற்றல் நுண்ணறிவுடையோருக்கே புலனாகும்.

முதன்மைத் தன்மை உடைய அகரவுயிர் கலத்தல் இல்லையேல் ஏனைய வுயிரெழுத்துக்களுக்கும் இயக்கம் இல்லை. அவ்வாறே இறைவன் உயிருக்குயிராய் உயிர்களுடன் உடனாய் நின்று கண்டும் காட்டியும் உதவாவிடில் உயிர்களுக்கு அறிவிச்சைசெயல்கள் நிகழா. இவ்வாறு இறைவன் உயிர்களோடு கலந்து நின்று உயிர்களுக்குச் செய்யும் உபகாரத்தினைத் திருஞானசம்பந்தர்,

> 'உரைசேரும் எண்பத்து நூறாயிரமாம் யோனி பேதம்
> நிரைசேரப் படைத்து அவற்றின் உயிர்க்குயிராய்
> அங்கங்கே நின்றான்"

என்றார்.

உலகுயிர்களோடு சிவமாகிய இறைவன் கலப்பினால் அவையேயாயும், பொருள் தன்மையினால் வேறேயாயும், இயங்கச் செய்ய உடனாயும் இருத்தலைச் சைவசித்தாந்தம் அத்துவித சம்பந்தம் என்று கூறுகின்றது.

இந்த அத்துவித சம்பந்தத்தைத் திருஞானசம்பந்த சுவாமிகள்,

"ஈறாய் முதலொன்றாய் இருபெண்ணாண் குணம் மூன்றாய்
மாறா மறைநான் காய்வரு பூதமவை ஐந்தாய்
ஆறார் சுவை யே ழாய்வரு எட்டுத்திசை தானாய்
வேறாய்உடனா னானிடம் வீழிமிழலையே"

என விதந்தோதினார்.



சைவசித்தாந்தம் கூறும் சுத்தாத்துவித நிலைக்கு அடிப்படை இத்திருப்பாடலேயாம்.

அத்துவிதம் உயிர்களிடத்துச் சிவம் நிற்கும் முறைமை.

அத்துவிதம் என்னும் சொல் ஆன்மாக்களிடத்து முதல்வன் நிற்கும் முறைமையைக் கூறுவது என்பது சைவசித்தாந்திகளின் கொள்கை. எனவே, அத்துவிதம் என்றசொல் ஆன்மாவுக்கும் சிவத்துக்கும் இடையே உள்ள சம்பந்தத்தை உணர்த்துவதே யன்றி , உள்ள பொருள் ஒன்றா, இரண்டா, அவை ஒன்றுக்கொன்று விரோதமானவையா, பேதமா, அபேதமா, பேதாபேதமா, என்பனவற்றை உணர்த்துவதன்று. சைவசித்தாந்தத்தில் 'அத்துவிதம்' என்னும் இச்சொல் இம்மூன்று நிலைகளுக்கும் பொதுவானது.

பொதுவாக சங்கரரின் அத்துவிதம் அபேதம் (ஏகாத்மவாதம்) என்றும் மாத்துவர் கூறும் துவிதம் பேதவாதம் எனவும் இராமானுஜர் கூறும் விசிஷ்டாத்துவிதம் பேதாபேதம் என்றும் கூறுவர்.

இதற்கு எடுத்துக்காட்டாகப் 'பொற்பணி (பொன்னால் ஆன நகை) போல் அபேதம்; இருளும் வெளிச்சமும் போலப் பேதம்; சொல்லும் பொருளும் போலப் பேதாபேதம்' என எடுத்துக் காட்டும் கூறுவர்.

## அபேதம் ஒன்றாயிருத்தல்

'அபேதம்' என்பதற்கு மாற்றாகச் சைவசித்தாந்தம் 'ஒன்றாயிருத்தல்' என்று கூறும். கலப்பினால் ஒன்றாயிருத்தல். மெய்கண்டார் ஒன்றாயிருத்தலுக்குக் கூறும் எடுத்துக்காட்டு, 'உடலுயிர்' என்பதாம். ஒருவன் என் பெயரைச் சொல்லி அழைக்கிறான். நான் அவன் அழைப்பை ஏற்றுப் பதில் கூறுகிறேன். அந்தப் பெயர் உடலுக்கு உரியதா? உயிருக்கு உரியதா? இரண்டும் இல்லை. ஆனால் உடலும் உயிரும் கலந்து ஒன்றாக இருக்கும் அந்த நிலைக்கு உரியது. உயிரின் கலப்பு இல்லையேல் உடல் இல்லை; உடல் அழியும். அதுபோல, சிவமாகிய முதல்வன், உலகு உயிர்களுடன் கலப்பினால் ஒன்றாக இராதபோனால் அவற்றிற்கு இருப்பு (existence) இல்லை.

## பேதம் – வேறாயிருத்தல்

இருளும் வெளிச்சமும் போலப் 'பேதம்' என்பதனைச் சைவசித்தாந்தம் மறுக்கின்றது.

இருளும் ஒளியும் தம்முள் பேதம் உடையன. அவை ஒன்று சேர்வதில்லை. அது போல இறை, உயிருலகுடன் பேதமானது; இறை உலகு உயிருடன் ஒன்று சேராது என்பர் பேதவாதிகள்.

பொருளின் தன்மையால் இறையும் ஏனை உலகு உயிரும் வேற்றுமையுடையன என்பது சைவசித்தாந்தத்திற்கும் உடன்பாடுதான். ஆயினும் அவற்றுடன் இறைக்குச் சம்பந்தமில்லை என்பதை ஏற்றுக் கொள்வதில்லை.

மெய்கண்டார் அகரமும் ஏனைய

எழுத்துக்களும் போல வேறாய் என்றார். அகரவுயிரின்றேல் ஏனைய எழுத்துக்கள் இல்லை. ஆயினும் அகரம் வேறு; ஏனைய எழுத்துக்கள் வேறு.

அவ்வாறே, இறை சேதன அசேதனப் பிரபஞ்சங்களுக்குத் தாரகமாக உள்ளது. இதற்கு மெய்கண்டார் காட்டும் உதாரணம் 'கண்ணும் சூரியனும் போல' என்பது. கண் காணும் ஆற்றல் உடையது. என்றாலும் இருளில் காண இயலாது. சூரியனின் கதிரொளி பொருள்களின் மேற்படர்ந்து கண்ணொடு கலந்தால்தான் கண் காண இயலும். ஒளியின்றேல் கண் காண இயலாது. கதிரொளி கண்ணுக்கு அந்நியமாக நின்று காட்டுதலைச் செய்கின்றது.

கண்ணும் சூரியனும் என்னும் இந்த உவமையினை மெய்கண்டாரின் மாணாக்கர்களில் ஒருவராகிய திருவதிகை மனவாசகம் கடந்தார், ' "நின்று அருக்கன் கண்ணுக்குக் காட்டுமாப்போல உனதறிவில் நண்ணி அறிவித்திடுவோம் நாம்" என்று கூறினார்.

இந்த சம்பந்தத்தைத் திருஞான சம்பந்தர், 'வேறாய்" என்றார். உயிர் வினை அனுபவம் பெறும் பொருட்டு, இறை, உலகுயிர்களுக்கு வேறாக நின்று காட்டும் உபகாரத்தைச் செய்கின்றது; சூரியன் கண்ணுக்கு வேறாக இருந்து காட்டுதல் போல. பிறர் 'பேதம்' என்பதனைச் சைவசித்தாந்தம் திருஞானசம்பந்தர் வாக்கில் 'வேறாய்' என்றுகூறுகின்றது.

**பேதாபேதம் - ஒன்றாயிருத்தல்**

இனி பேதாபேதம் என்போர் 'சொல்லும் பொருளும் போல' என்ற உதாரணம் காட்டுவர். சொல் வேறு அது உணர்த்தும் பொருள் வேறு என்றாலும் அவற்றிடையே காணப்பெறும் ஒற்றுமை போலப் பொருள் தன்மையினால் இறைக்கும் உலகுயிர்க்கும் வேற்றுமையுண்டெனினும் ஒற்றுமைச் சம்பந்தம் உண்டென்பர்.

**மெய்கண்டார்**

சைவசித்தாந்தம் பேதாபேத சம்பந்தம் கூறாமல் 'உடனாதல்' என்னும் சம்பந்தத்தைக் கூறும். இதற்கு மெய்கண்டார்,'கண்ணொளியும் ஆன்மபோதமும்'போல் என உதாரணம் கூறினார். கண் ஒருபொருளைக் காணும்போது ஆன்ம சிற்சத்தியும் உடனாய் நின்று காணுகின்றது. காணுவது கண் என்றாலும் கண் சடம், அதற்கு அறிய இயலாது. கண்ணோடு உடனிருந்து காண்பது ஆன்ம சிற்சத்தி. கண்ணின் செயலும் ஆன்மசிசத்தியின் செயலும் முன் பின் அன்றி இரண்டின் செயலும் உடன் நிகழ்கின்றன. இறைவன் வேறாய் நின்று காட்டுகின்றான்; உடனாய் நின்று காணுகின்றான். ஆன்ம முன்னேற்றத்திற்கு இறைவன் இவ்வாறு காட்டும் உபகாரத்தையும் காணும் உபகாரத்தையும் செய்தருளுகின்றான். இறைவன்பால் பத்தி பெருக இவ்வுபகாரமே காரணமாகும்.

கண் சடம்; அறிவற்றது. ஆதலால், காணுதலின்பயன் உயிருக்கே. ஆனால், கண்போல உயிர் சடமன்று; ஆதலால், சிவம் கண்ணுடன் ஒற்றித்துக் காணுதலினால் பயன் அடைவது உயிரே என்ற வேற்றுமையையை அறிதல் வேண்டும்.

சைவசித்தாந்தம் பேசும் சுத்தாத்துவிதத்தில் சிவமும் உயிரும் 'ஒன்றாய், வேறாய், உடனாய்' இருக்கும் சம்பந்தம் உண்டு; 'பேதம், அபேதம், பேதா பேத' சம்பந்தம் இல்லை. சிவத்துக்கும் உயிருக்கும் இடையே உள்ள இந்த ' ஒன்றாய், வேறாய், உடனாய்' அமைந்துள்ள இந்த அத்துவித சம்பந்தத்தை உமாபதி சிவாச்சாரியார் 'பிறிவரும் அத்துவிதம்' என்று கூறுவார்.

வேத உபநிடதங்களில் இறைக்கும் உயிர்களுக்கும் இடையே உள்ள சம்பந்தத்தை பேதமெனவும் அபேதம் எனவும் பேதா பேதம் எனவும் கொள்ள மொழிகள் உள்ளன. பெரியோர் தத்தம் கொள்களுக்கேற்ற மறை மொழிகளின் அடிப்படையில் தம் கொள்கைகளை நிறுவினர். மெய்கண்டார் ஞானசம்பந்தப் பிள்ளையாரின் தென்மறைமொழியின் அடிப்படையில் வடமொழி மறையில் கண்ட வேறுபாடுகளைச் சமன்வயப்படுத்தி, அத்துவித சம்பந்தத்தை விளக்கினார். இவ்வாறு இந்திய தத்துவ ஞானத்தில் பேதாபேதக் குழப்பத்தை மெய்கண்டார் தீர்த்து வைத்தார் என்பர்.

கரவை மு. தயாளன்

# சில மனிதர்களும் சில நியாயங்களும்



மதிவதனியின் துயரத்தை யாராலும் அடக்கமுடியாது. அவளுக்கென்று இருந்த ஒரே ரத்த சம்பந்தமும் போய்விட்டது. அவளை அவள் போக்கில் விட்டுவிட்டு எல்லோரும் அறைக்கு வெளியே வந்தார்கள். ஆரணியின் பிரச்சினை இப்போ ஒரு கட்டுக்கள் வந்துவிட்டது. மகேந்திரத்தையும் வெறுத்த பிள்ளைகள் இப்போ புரிந்து கொண்டு விட்டார்கள். அடுத்த கட்டம் ஆரணியின் வாழ்க்கையை சீரமைப்பதுதான். தாஸின் நிலை என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். அவனுடைய வழக்கு சம்பந்தமாக ஆராய வேண்டும். எல்லாம் சரி வந்தால் அடுத்த கட்டத்துக்கு நகரவேண்டும்.

கொழும்புக்கு சிறிய தகப்பனுக்குக் காசினை அனுப்பிவிட்டு உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள் ஆதித்யா.

"அப்பா சித்தப்பாவுக்குக் காசனுப்பியிட்டன்."

ஆரண்யா மெதுவாக எழுந்து தேனீர் போடச் சென்றாள்.

"அவ கொஞ்சம் வருத்தக்காறிதான். ஆனால் இவ்வளவு கெதியாய் நடக்குமென்று நினைக்கேல்லை"

அப்போ வீட்டு மணி அடித்தது.

தாஸின் அப்பாவும் சாரங்கனின் மாமாவும் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்.

"வாங்கோ."

"நான் இப்பதான் கேள்விப்பட்டனான். உடனே வெளிக்கிட்டிட்டன்."

என்று கூறிவிட்டுக் கதிரையில் அமர்ந்தார்.

"என்ன நடந்ததாம்?"

"என்ன அவ வருத்தக்காரி. அவவுக்கு வயித்திலை கொஞ்சம் பிரச்சினை."

"எல்லாம் காலபலன் பாருங்கோ. நாங்கள் ஒண்டு நினைக்க தெய்வம் ஒண்டு நினைக்கும்"

ஆரண்யா தேநீரைக் கொண்டுவந்து எல்லோருக்கும் பரிமாறினாள்.

"இப்ப பாருங்கோ முந்தநாள் எங்கடை றோட்டிலை ஒரு மனிசனும் இப்பிடித்தான் ஆரும் எதிர்பாராமல் பொக்கென்று போயிட்டுது மனிசன். எங்கடை வீட்டை பாருங்கே பேசாமல் இருந்த பொடியன் யாரும் எதிர் பார்க்காமல் பிரச்சினையிலை மாட்டுப் பட்டு நிற்கிறான். அவனுக்கு இப்ப ஏழரைச்சனியாம் . என்ன செய்யிறது. நாங்கள் நினைச்ச மாதிரியே எல்லாம் நடக்குது."

என்று அவர் கூறும்போது யாரும் எதுவும் கூறவில்லை.

பாவம் அவர் தன் பிள்ளையின் அடாவடித்தனத்தை எவ்வளவு கஸ்டப்பட்டு மறைக்கிறார்.



இதைப் புரிந்து கொண்ட மற்றவர்கள் வாயே திறக்கவில்லை.

மகேந்திரம் மட்டும் "இப்ப அவற்றை பிரச்சினை எந்தளவுக்கு இருக்குது என்று வினவிய விதத்திலேயே எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லாமல் சொன்னார்.

அத்தோடு அவர் ஒரு வழக்கறிஞர் நீதிபதி என்பதால் கேட்ட தோரணை அழகாக இருந்தது.

"உங்களுக்குச் சொன்னால் என்ன.. லோயர் மார் சொல்லிறதைப் பார்த்தால் கொஞ்சம் இறுக்கமாய் இருக்கும் போலை கிடக்குது." என்றார்.

"ஆர் லோயர்."

ஆதி முந்திக்கொண்டு "Mr Bala" என்றாள்.

அவரை ஒருக்கா நான் சந்திக்கவேணும் ஆதி.

ஆதி உடனேயே தொலைபேசியில் தொடர்பு கொண்டாள்.

நாளைக்கு நாலு மணிக்கு வரச்சொன்னார்.

"அப்பா இஞ்சை விக்டர் என்றொரு லோயர் இருக்கிறார். அவருக்கு நல்ல பெயர். ஆனால் அவர் இந்த வழக்கை எடுக்க மாட்டனெண்டிட்டார். அவர் இந்த வழக்கை எடுத்தால் வெல்லுவார் என்பதை சரியாயத் தெரிஞ்ச யாரோ தடுத்த மாதிரி எனக்குப் படுகுது."

" இந்த நாட்டிலையும் இப்பிடியெல்லாம் நடக்குதோ"

"எல்லா நாட்டிலையும் இருக்கிறவை மனிசர்தானே"

"என்ன காரணத்தாலை இப்பிடித் தடுத்திருக்க முடியும்."

"தம்பியின்ரை கதைப்படி அவர் அந்த இடத்திலை நிண்டதே ஒழிய. எதுவும் செய்யெல்லை."

"அப்ப ஆரெல்லாம் அங்கை நிண்டவையாம்"

"செந்தூரப் பூ கடை முதலாளியன்ரை மகன் அதிலை நிண்டவராம். அந்தாள் சரியான பணக்காரன். நான் நினைக்கிறன் அந்தாளின்ரை வேலையாயத்தான் இருக்கவேணும்."

"இப்ப விசயம் விளங்குது. கவலைப் படாதையுங்கோ நாங்கள் வெல்லக் கூடிய சாத்தியம் இருக்குது"

"அந்தப்பொடியன் இப்ப நாட்டிலையும் இல்லை. அவனை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பியாச்செண்டு கேள்வி."

"அவை எங்கை அனுப்பினாலும் பயமில்லை. முதல் எங்கடை பையன் அந்த இடத்திலை ஒண்டும் செய்யேல்லை எண்டதுக்கு சாட்சி தேடவேணும்."

"அதிலை இன்னும் இரண்டு பொடியள் நிண்டதாய் தம்பி சொல்லிறான். ஆனால் அவங்கள் இந்த பிஸ்னஸ்காரனுக்குப் பயந்து சாட்சி சொல்ல மாட்டனெண்டு நிற்கிறான்கள்."

"அவங்களை விடுங்கோ ஆராவது பப்ளிக் அதிலை நிண்டிருக்கலாம்தானை அவங்களைத்தான் நாங்கள் அணுகவேணும். எதுக்கும் நான் ஒருக்கா உங்கடை மகனோடை கதைக்கவேணும்."

என்றார் மகேந்திரம்.


ஆதியும் ஆரணியும் தகப்பனின் அணுகுமுறைகளைப் பார்த்து வியந்து கொண்டிருந்தனர். மகேந்திரத்தாரின் இந்த அணுகு முறைகள் எல்லோருக்கும் தெம்பைக்கொடுக்க ஆரம்பித்திருந்தது.

தாஸின் அப்பாவுக்கு தன் மகன் விடுதலையாகி விடுவான் என்ற நம்பிக்கை வந்துவிட்டது.

உடனே தாஸையும் அவரையும் சந்திக்கவைப்பதற்காக தெலைபேசியை எடுத்து மகனின் இலக்கத்தை சுழற்றினார்..

(இன்னும் வரும்)

# நம்பிக்கை பிறக்கவும், நம்பினார் துன்பம் அகலவும், தொழுவார்க்கு இன்பம் பெருகவும், சிவனருளால் பன்னலங்களும் வாய்க்கவும் ஓத வேண்டிய பதிகம்




ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : குறிஞ்சி
இராகம் : அரிகாம்போதி
தலம் : திரு ஆலவாய்
யாப்பு : திருவிருக்குக்குறள்

திருச்சிற்றம்பலம்

நீலமாமிடற். றால வாயிலான்
பால தாயினார். ஞாலம் ஆள்வரே

ஞாலம் ஏழுமாம். ஆல வாயிலார்
சீலமேசொலீர். காலன் வீடவே

ஆல நீழலார். ஆல வாயிலார்
கால காலனார். பால தாமினே

அந்த மில்புகழ். எந்தை யாலவாய்
பந்தி யார்கழல். சிந்தை செய்ம்மினே

ஆடலேற்றினான். கூட லாலவாய்
பாடி யேமனம். நாடி வாழ்மினே

அண்ணல் ஆலவாய். நண்ணி நான்றனை
எண்ணி யேதொழத் திண்ணம் இன்பமே

அம்பொன் ஆலவாய். நம்ப னார்கழல்
நம்பி வாழ்பவர். துன்பம் வீடுமெ

அர்க்க னார்வலி. நெருக்கன் ஆலவாய்
உரைக்கு முள்ளத்தார்க் கிரக்கம் உண்மையே

அருவன் ஆலவாய். மருவி நான்றனை
இருவ ரேத்தநின். றுருவம் ஓங்குமே

ஆரம் நாகமாய். சீரன் ஆலவாய்த்
தேர மண்செற்ற. வீர னென்பரே

அடிகள் ஆலவாய்ப். படிகொள் சம்பந்தன்
முடிவி லின்தமிழ். செடிகள் நீக்குமே

# வேண்டிய செல்வ வளம் வேண்டியவாறு கிடைக்க ஓத வேண்டிய பதிகம்

1. பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்க்கு உதவவும்,
2. நாடும் வீடும் நலம் பெறக் காரியங்கள் இயற்றவும்,
3. வறுமை நீங்கவும் அருளவல்லது

**ஆசிரியர் : திருஞானசம்பந்தர்**
**பண் : காந்தாரபஞ்சமம்,**
**இராகம் : கேதாரகௌளை,**
**தலம் : திருஆவடுதுறை.**

**திருச்சிற்றம்பலம்**

இடரினும் தளரினும் எனது உறு நோய்
தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்;
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு
இல்லை யேல் அதுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே

வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழ்இளம் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழ் இளமதி வைத்த புண்ணியனே

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு
இல்லையேல் அடுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே

நனவினும் கனவினும் நம்பா, உன்னை
மனவினும் வழிபடல் மறவேன், அம்மான்
புனல்விரி நறுங் கொன்றைப் போது அணிந்த
கனல்எரி அனல்புகு கையவனே

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு
இல்லையேல் அடுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே

தும்மலோடு அருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடிஅலால், அரற்றாது என் நா;
கைம்மல்கு வரிசிலைக் கணை ஒன்றினால்
மும்மதில் எரி எழ முனிந்தவனே.

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு
இல்லையேல் அடுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே

கையது விழினும் கழிவு உறினும்
செய்கழல் அடிஅலால் சிந்தை செய்யேன்
கொய்அணி நறுமலர் குலாய சென்னி
மைஅணி மிடறு உடை மறையவனே

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு
இல்லையேல் அடுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே

வெம்துயர் தோன்றி ஓர் வெருஉறினும்
எந்தாய், உன் அடிஅலால் ஏத்தாது, என் நா;
ஐந்தலை அரவு கொண்டு அரைக்கு அசைத்த
சந்தவெண் பொடிஅணி சங்கரனே

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு
இல்லையேல் அடுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே

வெப்பொடுவிரவி ஓர் வினை வரினும்
அப்பா, உன் அடி அலால் அரற்றாது, என் நா;
ஒப்புடை ஒருவனை உரு அழிய
*அப்படி அழல் எழ விழித்தவனே*





இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு
இல்லையேல் அடுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே

பேர்இடர் பெருகி, ஓர் பிணி வரினும்
சீர் உடைக் கழல் அலால், சிந்தை செய்யேன்;
ஏர் உடை மணி முடி இராவணனை
ஆர் இடர் பட, வரை அடர்த்தவனே

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு
இல்லையேல் அடுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மலர் அடிஅலால் உரையாது, என் நா;
கண்ணனும் கடிகமழ் தாமரை மேல்
அண்ணலும் அளப்பு அரிது ஆயவனே

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு
இல்லையேல் அடுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே

பித்தொடு மயங்கி ஓர் பிணி வரினும்
அத்தா, உன்அடி அலால் அரற்றாது என்நா;
புத்தரும் சமணரும் புறன் உரைக்கப்
பத்தர்கட்கு அருள் செய்து பயின்றவனே

இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்றுஎமக்கு
இல்லையேல் அடுவோ உனது இன்னருள்?
ஆவடுதுறை அரனே

அலைபுனல் ஆவடு துறைஅமர்ந்த
இலைநுனை வேல்படை எம் இறையை
நலம்மிகு ஞானசம் பந்தன் சொன்ன
விலைஉடை அருந்தமிழ் மாலை வல்லார்

வினை ஆயின நீங்கிப்போய் விண்ணவர்
வியன் உலகம் நிலை ஆக முன்ஏறுவர்;
நிலமிசை நிலைஇலரே.

# இலண்டன் மாநகரில் விழாக்கோலம்

## இரண்டாவது உலகத் திருமுறைப் பெருவிழாவும்; ஆய்வு மாநாடும்

### 2014ம் ஆண்டின் சைவத் தமிழ்ப் பெருவிழாவாக மலர்கின்றது

"நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!!

இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!!"

எல்லாம் வல்ல அபிதகுஜாம்பாள் சமேத அருணாசலப் பெருந்தகையின் பேரருளினாலே இலண்டன் மாநகரிலே இரண்டாவது உலகத் திருமுறைப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறத் திருவருள் கைகூட்டியுள்ளது. வேத ஆகம புராண, இதிகாச, இலக்கிய கருவூலமாக அருள் சுரக்கும் பன்னிரு திருமுறைகள் நமக்குக் கிடைத்த அரும் பெரும் பொக்கி~மாகும். தமிழின் அருமையையும்; பெருமையையும் பண்ணிசையால் பக்திசெய்த இனிமையையும் இந்தத் திருமுறையில் நாம் காணலாம்.

திருமுறையே சைவநெறிக் கருவூலம்;, தென்தமிழின் தேன்பாகுமாகும்.

திருமுறையே கயிலையின்கண் சிவபெருமான்;; செவிமடுத்த செந்தமிழ் வேதம்.

திருமுறையே நடராஜன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்;

முதலாவது "உலகத் திருமுறை மாநாடு *2013*" மலேசியத் திருநாட்டிலே கோலாலம்பூர் தலைநகரிலே கடந்த செப்டம்பர் *2013* இலே மூன்றுநாள் பெருவிழாவாக மிகவும் கோலாகலமாக நடந்தேறியது. மலேசிய இந்து சங்கம் இந்தச் சிறப்பினைப் பெருமையுடன் நடாத்தியது. திருமுறைகள் உலகமண்டலமனைத்தும் பரந்தொலிக்க வேண்டும் என்ற



திருஞானசம்பந்தர் | திருநாவுக்கரசர் | சுந்தரமூர்த்தி | மாணிக்கவாசகர்

முன்னெடுப்பிலே இரண்டாவது உலகமாநாடு ஐரோப்பாக் கண்டத்திலே ஆங்கிலத் தலைநகராம் இலண்டன் மாநகரிலே சிறந்தொலிக்க வேண்டுமென்று பெருமையுடன் அரங்கிலே இந்தப்பணி கையளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இலண்டனிலே அமைப்புக் கண்ட செயற்குழு இந்தவிழாவினை இலண்டன் சிவன் கோவிலின் அனுசரணையுடன் வருகின்ற செப்டம்பர் மாதம் 19ம் 20ம் 21ஆம் திகதிகளில் நடாத்தத் திருவருள் கைகூட்டியுள்ளது. முதலாம் நாள் ஆரம்ப விழா இலண்டன் சிவன்கோவிலிலும் 2ஆம் 3ஆம் நாட்கள் செட்ஜ்கில் பாடசாலை கலாமண்டபத்திலும் நடைபெறுகின்றது.

இந்தத் திருமுறைப் பெருவிழா பின்வரும் நோக்கங்களை முதன்மையாகக் கொண்டிருக்கின்றது.

1. எமது இளம் தலைமுறையிரிடையே திருமுறைகளின் பெருமைகளையும் முக்கியத்துவத்தையும் குறித்த விழிப்புணர்வையும் ஆவலையும் ஏற்படுத்தல்.

2. விஞ்ஞான அணுகுமுறைகளுடனான ஆய்வுகள் மூலமும் அர்த்தமுள்ள உரையாடல்கள் மூலமும் திருமுறைகளின் 21ம் நூற்றாண்டு வளர்ச்சியை உறுதிப்படுத்தல்.

3. தமிழிசையைத் தமிழ்மொழியைத் திருமுறைகளினூடாக வளர்க்க முயற்சிகளை எடுத்தல்.

4. திருமுறைகளின் மனிதகுலச் சிந்தனைகளையும் உலகளாவிய நோக்கையும் உலகறியச் செய்தல்.

5. திருமுறைகளிலே கூறப்பட்டுள்ள கொள்கைகளையும் அறவழிகளையும் செயற்படுத்தவும் பிரயோகிக்கவும் ஏற்றவகையில் திருமுறைகளுக்கு விளக்கங்களும் விரிவுரையும் அளித்தல்.

6. சைவத்திருக்கோவில் வழிபாடுகளிலும் வீட்டிலும் திருமுறைகளை ஓதும் வழக்கத்தை பழக்கமாக்க முயற்சிதிதல்

மாநாட்டினையொட்டி இந்த நோக்கங்களை விரிவாக்கும் தலைப்புகளில் ஆய்வுக்கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. தரமானதென்று தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகள் விழாமலரிலே பிரசுரிக்கப் படுவதுடன் சில கட்டுரைகள் மாநாட்டிற் சமற்பிக்கவும் தேர்ந்தெடுக்கப்படும். இதையொட்டிய மேலும் விரிவான விபரங்களை இதற்லீகன ஏற்படுத்தப்பட்ட தனியான இணையத்தளத்திலே காணலாம்.

இணையத்தள முகவரி:

www.thirumuraifestivallondon2014.com.

மேலும் இப்பெருவிழா உலகளாவிய சைவப் பேரறிஞர்களின் பேருரைகளாக, பண்ணிசையரங்கமாக, திருமுறை கூறும் நெறிகளை உணர்த்தும் பரதக்கலை நிகழ்வாக காணொலிக் காட்சிகளாக இன்னும் பல்வேறு அம்சங்களில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

திருமுறைப்பெருவிழா சிறந்தோங்க விருந்தோம்பி உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விருந்தினர் நுழைவுக்கட்டண விபரங்களுக்கு இணையத்தளத்தினைப் பார்க்கவும்.

திருமுறையே நம் உயிர்த்துணையே!

திருமுறையை ஓதுவோம்! வாழ்வில் வளம் பெறுவோம்!

சிவாயநம என்று சொல்லுவோம் சிவனுடை இன்னருள் பெற்றிடுவோம்!!

**-விழாக் குழு**

# அல்லல்கள் அகலவும், வாழ்க்கை ஒளிபெறவும், சிவபெருமான் திருவருளை உரிமையுடன் வேண்டிப் பெறவும் ஓத வேண்டிய பதிகம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வலக்கண்பார்வை வேண்டிப் பாடி ஒளிபெற்ற பதிகம்

ஆசிரியர் : சுந்தரமூர்த்திகள்
பண் : செந்துருக்கி
இராகம் : மத்தியமாவதி
தலம் : திருவாரூர்

திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்,
பிறரை வேண்டாதே
முளாத் தீப் போல் உள்ளே கனன்று,
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங்கு இருப்பீர்? திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே

விற்றுக்கொள்வீர்; ஒற்றி அல்லேன்;
விரும்பி ஆட்பட்டேன்;
குற்றம் ஒன்றும் செய்தது இல்லை;
கொத்தை ஆக்கினீர்;
எற்றுக்கு அடிகேள், என்கண்
கொண்டீர்? நீரே பழிப்பட்டீர்;
மற்றைக் கண்தான் தாராது ஒழிந்தால்,
வாழ்ந்து போதீரே

அன்றில் மூட்டாது அடையும் சோலை
ஆரூர் அகத்தீரே,
கன்று முட்டி உண்ணச் சுரந்த
காலி அவைபோல,
என்றும் முட்டாப் பாடும் அடியார்
தம்கண் காணாது
குன்றில் முட்டிக் குழியில் விழுந்தால்
வாழ்ந்து போதீரே

துருத்தி உறைவீர்; பழனம் பாதியாச்
சோற்றுத்துறை அள்வீர்,
இருக்கை திருஆரூரே உடையீர்;
மனமெனா வேண்டா;
அருத்தி உடைய அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து, மறுமை பணித்தால்,
வாழ்ந்து போதீரே.

செந்தண் பவளம் திகழும் சோலை
இதுவோ திருஆரூர்?
எந்தம் அடிகேள், இதுவே ஆம்ஆறு,
உமக்கு ஆட்பட்டோர்க்கு?
சந்தம் பலவும் பாடும் அடியார்
தம் கண் காணாது
வந்து, எம்பெருமான் முறையோ?
என்றால், வாழ்ந்து போதீரே.

தினைத்தாள் அன்ன செங்கால்
நாரை சேரும் திரு ஆரூர்ப்
புனைத்தார் கொன்றைப் பொன்போல்
மாலைப் புரிபுன் சடையீரே,
தனத்தால் இன்றித் தாம்தாம்
மெலிந்து, தம்கண் காணாது,
மனத்தால் வாடி, அடியார்
இருந்தால், வாழ்ந்து போதீரே.

ஆயம் பேடை அடையும் சோலை
ஆரூர் அகத்தீரே,
ஏய எம்பெருமான், இதுவே ஆம்ஆறு
உமக்கு ஆட்பட்டோர்க்கு?
மாயம் காட்டிப் பிறவி காட்டி,
மறவா மனம்காட்டிக்
காயம் காட்டிப் பிறவி காட்டி,
மறவா மனம்காட்டிக்
காயம் காட்டிக் கண்ணீர் கொண்டால்
வாழ்ந்து போதீரே.

கழியாய், கடல்ஆய், கலன்ஆய்,
நிலன்ஆய், கலந்த சொல்ஆகி,
இழியாக் குலத்தில் பிறந்தோம்;
உம்மை இகழாது ஏத்துவோம்



பழிதான் ஆவது அறியீர்.
அடிகேள்பாடும் பத்தரோம்.
இருந்தால் வாழ்ந்து போதீரே.

பேயோடேனும் பிரிவுஒன்று இன்னாது
என்பர் பிறர்எல்லாம்;
காய்தான் வேண்டில், கனிதான் அன்றோ.
கருதிக் கொண்டக்கா:?
நாய்தான் போல நடுவே திரிந்தும்.
உமக்கு ஆட்பட்டோர்க்கு
வாய்தான் திறவீர்; திருஆரூரீர்.
வாழ்ந்து போதீரே.

செருந்தி செம்பொன் மலரும் சோலை
இதுவோ. திருஆரூர்?
பொருந்தித் திருமூ லட்டா நம்மே
இடமாக் கொண்டீரே;
இருந்தும் நின்றும், கிடந்தும், உம்மை
இகழாது ஏத்துவோம்;
வருந்தி வந்தும். உமக்கு ஒன்று
உரைத்தால், வாழ்ந்து போதீரே

காரூர் கண்டத்து எண்தோள் முக்கண்
கலைகள் பலஆகி,
ஆரூர்த் திருமூ லட்டா நத்தெ
அடிப்பேர் ஆரூரன்;
பாரூர் அறிய. என்கண் கொண்டீர்.
நீரே பழிப்பட்டீர்.
வாரூர் முலையாள் பாகம் கொண்டீர்.
வாழ்ந்து போதீரே.

**நற்குணமும், நற்செயலும் உடைய உயர்ந்தோர் நம் உறவாக அமையவும், தாயினும் நல்ல தலைவனாகிய சிவன் அருள்திறம் நம் வாயினும், மனத்தினும் நீற்கவும், திருக்கோணமலை அமர்ந்தான் திருவருள் வேண்டி ஓத வேண்டிய பதிகம்.**

ஆசிரியர் : திருஞானசம்பந்தர்
பண் : புறநீர்மை.
இராகம் : பௌளி.
தலம் : திருக்கோணமலை.

திருச்சிற்றம்பலம்

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே

கடிதென வந்த கரிதனை யுரித்து அவ்வுரி
மேனிமேற் போர்ப்பர்
பிடியென நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடும் உடனாய்த்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமாமலை யமர்ந்தாரே

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடைவைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை
பாகமாக முன்கந்தவர் மதில்மேல்
தனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்தாரே

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன்தேவி வேண்ட முன்கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடல்
தரளஞ் செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்தவன் திரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே

தாயினும் நல்லதலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதருநூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடம் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

பரித்துநன் மனத்தால் வழிபடும் மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவற்கருளுஞ்
செம்மையார் நம்மையாளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்
சூழ்கோணமா மலையமர்ந்தாரே

எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட ஆத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலை யமர்ந் தாரே

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யாகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணமொள் ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே

நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறியலாதன புறங்கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒரு பால்
மெல்லிய லொடும்உடனாகித்
துன்றுமொண் பௌவமவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபலமோதிக்
குன்று மொண்கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே

குற்றமி லாதார் குறைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியார் பெருமான்
கருத்துடை ஞானசம்பந்தன்
உற்றசெந் தமிழார் மாலை யீரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமுமாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

# திருமதி ஷாமினி ஜெயக்குமார்



அன்னை மடியில்
03.08.1958

ஆண்டவன் பிடியில்
01.07.2014

எங்கள் அண்ணிக்கு என் சமர்ப்பணம்

தன் வசீகர புன்னைகையாலும் அன்பான பேச்சாலும் காந்தம் போல் அனைவரையும் கவருவார் என் அண்ணி. அவரின் இறுதிப் பயணத்தின்போது வந்து மரியாதை செலுத்திய உறவுகளின் தொகையே அண்ணியின் அன்பிற்குச் சான்று.

உதிரத்தால் மாத்திரம் உருவாகும் உறவு உறவன்று. அதையும் தாண்டி புனிதமானது எங்கள் உறவு. கடல்கடந்தும் அழகாய் உறவுப் பாலம் அமைத்து, உறவுகளை மேம்படுத்தும் உன்னத ஜீவன் என் அண்ணி.

விழி மூடி திறக்கும் பொழுதெல்லாம் ஷா ஷா என்று தன் பாசமகளையே உலகமாக நினைக்கும் அன்புத்தாய். ஜெய், ஜெய் என்று தன் கணவனையே சுற்றிவரும் காதல் மனைவி என் அண்ணி.

தாய்வழி, தந்தை வழி, கணவன் வழி என எந்த உறவினர் என்றாலும், ஒரே மாதிரி நேசித்து எல்லோரின் அன்பையும் பெற்றவர். இவை யாவும் நான் அண்ணியிடம் கற்ற விடயங்கள்.

இந்த நாட்டுக்கு நான் வந்தபோது, ஆதரவுக்கரம் நீட்டியணைத்து அண்ணியாய், தோழியாய், நல்லாசிரியையாய் உறவின் பல பரிமாணத்தில் அன்பு செலுத்தியவர் என் அண்ணி.

ஒரு சிறிய வாழ்க்கைச் சக்கரத்தில் அழகிய காவியம் படைத்துள்ளார். இவர் கொழும்பில் பிறந்து இலண்டனில் மறைந்தார். இந்த அன்வு ஜீவனின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

என்றும் அன்புடன்,

**திருமதி புனிதா ரகுராஜ்**

கரோ.

# திருமுறைகள் சைவத்தமிழ் மக்களின் உயிர் நாடி

சைவப்புலவர் சைவசித்தாந்தபண்டிதர் சிவஸ்ரீ பா.வசந்தக் குருக்கள்B.A(horns)

இறைவன் அருளால் உலகத்திற்கு கிடைத்த பெரும் சொத்து திருமுறைகள். ஆன்மாக்கள் இறைவனை அடையும்வழிக்கும் இறைவன் ஆன்மாக்களை சந்திக்கும் வழிக்கும் இடையில் இருப்பது திருமுறை.பல்வேறு நாயன்மார்களால்வேறு வேறு காலங்களில் அருளப்பட்டாலும் அவை தரும் சாரம் ஒன்றுதான்.அதாவது துன்பங்களில் இருந்து விடுபடுவதற்கு இறைவன் திருவடியே உதவும்.அடியைப் போல் அண்ணன் தம்பி உதவ மாட்டான் என்பது சாதாரண உலக வழக்கு உண்மையில் இறைவன் அடி அதாவது திருவடியைப் போல் யாரும் உதவ மாட்டார்கள்.இதனால் தான் திருமுறைகள் பலவற்றில் இறைவன் திருவடிகளை போற்றுகிறார்கள்.உதாரணமாக மாணிக்க வாசகர் எத்தனை அடி போட்டார் ஈசனடி போற்றி எந்தையடி போற்றி தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி அப்பர் சுவாமிகள் பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டுவிண்ணப்பம் என்றார்.சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாதமே மனம் பாவித்தேன் என்றார்.சேக்கிழார் மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம் என்கிறார்.

ஆகவே துன்பச் சுமைகளை குறைப்பதற்கு தேவாரங்களை பண்ணோடு பாட வேண்டும்.என்ன தேவாரங்கள் என்ன என்ன பண்ணுடன் ஓத வேண்டும் என்ற அமைவு உண்டு. ஓதுவார்கள் அப் பண்களுடன் அல்லது அதற்கு நிகரான பண்களுடன் ஓதுவார்கள்.ஓதுவது என்பது உள்ளதை உள்ளபடி சொல்வது. திருமுறைகளில் உள்ள சொற்களை நாம் மாற்ற முடியாது அப்படியே பாட வேண்டும்.இறைவனால் அருளப்பட்ட



வேதங்களும் மாற்றமுடியாது அதேபோல திருமுறைகளும் அமைவதால் தமிழ் வேதங்கள் எனப்பட்டன.

ஆலயங்களில் பல சந்தர்ப்பங்களில் திருமுறைகள் இடம் பெறுகின்றன. ஆகமங்கள் திருமுறைக்கு முக்கிய இடம் கொடுக்கின்றன. மகோற்சவ காலங்களில்ஒவ்வொரு திக்குகளிலும் திருமுறைகள் ஓதப் படும் அதேபோன்று தீர்த்த விழாவின்போது திருப்பொற்சுண்ணம் ஓதப்படுகின்றது.பலமுறை பஞ்சபுராண மரபு பேணப்படுகிறது.திருவூஞ்சல் காலங்களில் பொன்னூசல் ஓதப்படுகிறது. சிறப்பாக திருவெம்பாவைக்காலம் திருவாசகம் போற்றப் படுகிறது.ஏனெனில்

மணிவாசகர் பாடியதை இறைவன் எழுதிய பெருமை உடையது.

இவ்வாறு பல பெருமைகளை உடைய திருமுறைகளின் தத்துவங்களை சிறுவர்கள் பெரியவர்கள் விளங்கி கொள்வதற்கு ஆலயம் தோறும் பண்ணிசை வகுப்புக்கள் நடைபெற வேண்டும் இதற்காக ஓதுவார்கள் பலர் தேவைப்படுவர். நல்லமுறையில் ஒழுங்குகளை மேற்கொண்டால் ஓதுவார்கள் மூலம் பண்ணோடு திருமுறைகளை ஓதும் பணி பரவலாம்.

திருமுறைகளில் ஆத்மீக விடயங்கள் மட்டுமன்றி சோதிடம் கணக்கியல் வாழ்வியல்இசையியல் உள்ளிட்ட பல விடயங்கள் உண்டு. இம்மையே தரும் சோறும் கூறையும் ,அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு என்று சுந்தரர் இந்த லோகத்தில் நல்ல வசதியுடன் வாழ்க்கையும் அதே வேளை பரலோகத்தில் நல்ல பதவியும் உண்டு.என்கிறார். ஒன்பதோடு ஒன்றோடு ஏழு பதினேட்டோடு ஆறும் என்று ஒரு சோதிட கணக்கியலை சம்பந்த சுவாமிகள் கோளறு பதிகத்தில் குறிப்பிடுகிறார்.

காலையில்எழ வேண்டும் கடவுளை வணங்க வேண்டும் என்றார் அப்பர் சுவாமிகள். புலர்வதன் முன் மெழுக்குமிட்டு நித்தலும் எம்பிரானுடைய கோவில்புக்கு என்கிறார்.நீள நினைந்தடியேன் உன்னை நித்தலும் கை தொழுவேன் என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை என்ற உலக வாழ்வின் பொருட்களை குறிப்பிடுகிறார்கள் .

எந்த துன்பம் வந்தாலும் இறைவனை நாம் மறக்கக் கூடாது என்பதை திருமுறைகள் எடுத்துக் கூறுகின்றன. இடரினும் தளரினும் எனதுறு நோய் தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன். நாயன்மார்கள் படாத துன்பமா நாம் படுகிறோம் இடைவிடாது இறை நாமம் துதிகள்திருமுறைகள் பாடினால் துன்பம் குறையும் முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்.என்றார் மணிவாசகர்.

எனவே சைவத்தமிழ் மக்களின் உயிர் நாடியான திருமுறைகளை ஓதுவோம் உயர்த்துவோம் உயர்வோம் ■

## வாசகர் குரல்

அன்புள்ள சிவானந்த சோதி அவர்கட்கு,

தாங்கள் 11 வருடங்களாக சேவையாக இலவச வெளியீடு தகவல் சஞ்சிகை மிக அழகுற வெளியிட்டு வந்துவிட்டு 14 july இதழ் அட்டையின் LOGO மாற்றி புத்தகத்தின் தரம் குறைந்துள்ளமை வாசகர்களாகிய நமக்கு ஏமாற்றத்தைத் தருகிறது உள்ளே உள்ள காகிதத்தின் தரம் குறைந்துள்ளது தகவல் சஞ்சிகை இப்படித்தான் இருக்கும் என்று மனதில் படம் உண்டு. ஆனால் இந்தமுறை நீங்கள் வைத்த இடத்தில் அப்படியே யாரும் எடுக்காமல் இன்றும் சஞ்சிகை உள்ளது. தங்கள் சஞ்சிகை பழைய மாதிரி புதுப் பொலிவுடன் வெளிவர வாழ்த்துகிறோம் அன்பு வாசகர்களை ஏமாற்றவேண்டாம். நன்றி

A.M. LINGAM

தங்களின் கருத்தை கவனத்தில் எடுத்துக்கொள்கிறோம். இதழ் தொடங்கி 12 ஆண்டுகள் ஆகின்றன.. எங்களால் இயன்றவரை தரமாகவும், சிறப்பாகவும் வெளிட்டு வருகிறோம். நவீன இதழியல் சூழலுக்கு ஏற்ப இதழின் வடிவத்தையும் பொருளாதார சூழலுக்கு ஏற்ப தரத்தையும் சிறிது மாற்றம் செய்துக்கொள்ளவேண்டிய கட்டாயத்தில் தமிழா தகவல் இதழ் உள்ளது என்பதை வாசகர்களின் கவனத்திற்கு சொல்ல கடமைப்பட்டுள்ளோம். தொடர்ந்து வாசகர்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர்



# சைவ மதத்தவர் முன் கிடக்கும் தார்மீகக் கடமை ஒன்று

**என்.வி.நாதன்**, லண்டன்

ஒருமுறை ஒரு கோவிலின் முன் மேசையில் வைக்கப்பட்டிருந்த படச்சுருள் ஒன்றை எடுத்து விரித்தேன். பார்த்ததும் தலை சுற்றியது. மனதைத் தேற்றிக் கொண்டு வெளியில் வந்துவிட்டேன் – அந்தப் படச்சுருளையும் அப்படியே அதே மேசையில் போட்டுவிட்டு. நான் பார்த்தது இதைத்தான். விஷ்ணு சிவனைக் காலால் மிதித்துக் கொண்டிருப்பதாக அந்தப் படம் சித்தரிக்கப்பட்டிருந்தது. சிவனைவிட விஷ்ணுவே உயர்ந்தவர் என்ற வைஷ்ணவ மதத்தவரின் சிந்தனை அப்படம் மூலம் காட்டப்பட்டிருந்தது. பெரும்பாலான வட இந்தியர்களின் பிரதான தெய்வம் விஷ்ணு என்பது யாவரும் அறிந்ததே.

இன்று மேற்கு நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழின – கோவில் ஸ்தாபகர்களும் கிருஷ்ணர், ஆஞ்சநேயர்

போன்ற சுவாமிகளை ஒவ்வொரு மூலையிலுள்ள அமைவிடத்தில் வைத்து வழிபாடு செய்வதைப் போன்று, சிவனையும் ஒரு மூலையில் வைத்து வழிபாடு செய்யும் பெரும் தவறுகளைச் செய்துவிடுவார்களோ என்ற ஒரு கலக்கம் என் மனத்தில் எழுகிறது. காரணம், மேற்கு நாடுகளில் இன்று சிவன் கோவில்களுக்கு மவுசு குறைந்துவருவதாகச் சிலர் ஆதங்கப்படுகிறார்கள். சிவன் கோவில் இருந்தாலும், பக்தர்களின் நாட்டம் அம்மன் கோவில்களை நாடியே சென்று கொண்டிருப்பதை அம்மன் கோவில் திருவிழாக் காலங்களில் அங்கு கூடும் பக்தர்க கூட்டத்தை வைத்து எடைபோடக்கூடியதாக இருக்கிறது. அம்மன் மற்றும் பிற கோயில்களுக்குப் பக்தர்கள் பெரும்திரளில் போவது தவறு என்ற கருத்தை இங்கு கூறவரவில்லை. ஒவ்வொருவரும் தம் மனத்திற்கு இசைந்த இஷ்ட தெய்வங்களின் கோவில்களை நாடிச் செல்வதுதான் இயற்கையும் – அதில் தவறேதும் கிடையாது. ஆனால், தவறொன்று உண்டு.

நாடுகள் தமது கொள்கைகளை, குறிப்பாக வெளிநாட்டுக் கொள்கைகளை வகுக்கும்போது, தமது நாட்டு இனம் – மதம் சம்பந்தப்பட்ட தனித்துவம் – கௌரவம் – சுதந்திரம் போன்றவை பாதிக்கப்படாத வகையிலேயே கொள்கைகளை வகுப்பார்கள். இது தனி மனிதனுக்கும் பொருந்தும். தனி மனிதனோ, மனிதர்களோ, நற்காரியங்கள் – பொதுக்காரியங்கள் என்று மேற்கொள்ளும்போது, தமது தனித்துவம் – மகத்துவம் போன்றவற்றை முன்னிறுத்தியே காரியங்களை ஆற்றவேண்டும். அறிவுடையோர், குறுகியகால – நீண்டகால பலன்களை கவனத்திற்கு எடுத்தே கடமைகள் – காரியங்களைச் செய்வார்கள். இங்கு இன்னொரு விடயத்தையும் கவனத்திற்கு எடுக்க வேண்டும். உணர்ச்சி பூர்வமாகக் காரியங்களை ஆற்றுவார்கள் சிலர். சிலர் அறிவுப்பூர்வமாகச் சிந்திப்பார்கள் – செயற்படுவார்கள். குறிப்பாக விடயத்திற்கே வருகிறேன்.

மேற்கு நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழினம் கோவில்களை அமைக்கும்போது, தாம் அன்றாடம் வழிபட்டுவந்த இஷ்ட தெய்வங்களை அடிப்படையாக வைத்தே பிள்ளையார், முருகன், அம்மன் கோவில்களென்று ஸ்தாபித்து வருகின்றார்கள். அந்தந்தக் கோவில்களில் – அந்தந்த பிரதான தெய்வங்களுக்கே முன்னுரிமையும் கொடுக்கப்படுகின்றது. உணர்ச்சிப் பூர்வமாகச் சிந்திப்பவர்களின் செயல்கள் அப்படித்தான் அமையும். அதில் தவறுகளும் இல்லை. அவர்களைப் பொறுத்தளவில், சென்று வணங்குவதற்குக் கோவில் ஒன்று கிடைத்திருக்கிறது. உருளுவதற்கும் – காவடி எடுப்பதற்கும், எள் – எண்ணெய் எரிப்பதற்கும், தீச்சட்டி சுமப்பதற்கும், தம் – தம் மனக்குறைகளைக் கூறி பரிகாரம வேண்டுவதற்கும் கோவில் ஒன்று உள்ளது என்பது ஒரு திருப்திதான். கோவில வருமானங்களில் ஒரு பகுதியைத் தம் இனத்தின் மேம்பாட்டிற்காக கைகொடுத்து உதவுவதற்கும் வழி கிடைத்திருப்பது மகிழ்ச்சியே. புலம்பெயர் தமிழினம் குறிப்பாக கோவில் ஸ்தாபகர்கள் உணர்ச்சிப் பூர்வமாக மட்டும் சிந்தித்துச் செயலாற்றுவதோடு மட்டும் நின்றுவிடுகிறார்கள் என்பதையும், அறிவுப்பூர்வமாகச் சிந்தித்துச் செயலாற்றத் தவறியுள்ளார்கள் என்பதையும் மிகவும் வேதனையோடு இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

– தமிழர்கள் யார்? எமது பிரதான மதம் எது? எமது தொன்மை – தனித்துவம் – மகத்துவம் – கௌரவம் எதில் தங்கியுள்ளது? எமது தனித்துவம் – முகவரி (IDENDITY) போன்றவற்றை நிலைநாட்ட நாம் இதுவரை என்ன உருப்படியாகச் செய்திருக்கிறோம்? யாருக்கு முன்னுரிமை எங்கே கொடுக்க வேண்டும் போன்றவற்றை இனிவரும் காலங்களிலாவது ஆக்கப்பூர்வமாகவும் – அறிவுப்பூர்வமாகவும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்பதே என் போன்ற பலரின் ஆதங்கங்கள். செயலாற்ற வேண்டியது

ஒரு தார்மீகக் கடமையும் கூட.

மலைக்கள்ளன் படத்தில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை இயற்றி, டி.எம்.எஸ். பாடிய "தமிழன் என்றொரு இனம் உண்டு – தனியே அவர்க்கொரு குணம் உண்டு" என்ற பாடல்வரி ஞாபகம் வருகிறது. சைவம் என்றொரு உயர்ந்த மதம் உண்டு. நாம் தமிழினம் – நமக்கு சைவம் என்றொரு பெரிய மதம் இருக்கின்றது. சைவத்தை உலகெங்கும் நிலைநிறுத்த வேண்டிய ஒரு கடமை நம்முன் கிடக்கிறது என்பதைப் புறந்தள்ளி செயற்பட்டால், அதன் பின் விளைவுகள் மிகவும் மோசமானதாகவே அமைவதற்கு வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கின்றன. சைவ மகாநாடுகள் வைப்பதும் – தென்னாடுடைய சிவனே போற்றி – என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று பாடிக்கொண்டிருப்பதும் ஆக்கப்பூர்வமாகாது. மேற்கு நாடுகளில் கோவில்கள் அமைக்கச் சிந்திக்கும் பெரியோர் – புலம்பெயர் தமிழினம் சிவனுக்கு முன்னுரிமை கொடுத்து சிவன் கோவில்களை அமைக்க முனைப்புக் காட்ட வேண்டும். சிவன் கோவில்களை அமைப்பதில் ஏன் இவ்வளவு ஆர்வம் என்பதன் தாத்பரியத்தை எமது இளைய தலைமுறைகள் புரிந்துணர வேண்டும். அவர்களின் புரிந்துணர்வுதான் இன்றைய முதியோர், சைவமும் – தமிழும் எதிர்காலத்தில் தழைத்தோங்க இன்றுபோடும் அத்திவாரம். காரணம், இன்றைய இளைய தலைமுறைகள்தானே நாளைய சைவத் தமிழ்ப் பெருங்குடிகளின் தூண்கள். மேற்கு நாடுகளில் சிவன் கோவில்கள் பெருகிவரும்போது, மேற்கு நாட்டவரும் நாளடைவில், சைவத்தின் பெருமையை அறிந்து கொள்வார்கள். தென்னாடுடைய சிவனே போற்றி – என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி என்பதற்கும், மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம் என்று பாடுவதற்கும் அப்போதுதான் ஒரு உண்மையான அர்த்தம் இருக்கும். இங்குதான் தமிழினத்தின் முகவரி (IDENDITY) பாதுகாக்கப்படுகிறது. தமிழினத்தின் முகவரி, அடிப்படையில் "சைவம்" என்பதையும், நமது முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்பதையும் தமிழினத்தில் ஒவ்வொருவரும் புரிந்து வைத்திருக்க வேண்டும் என்று கூறுவதில் தவறுகள் ஏதும் இல்லை என்றே நம்புகின்றேன். திருமுருக கிருபானந்தவாரியார் கூறுவார், சிவனுக்கு மேல் தெய்வம் இல்லை என்று.

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் நன்று" என்பதில் வள்ளவர் செய்யக்கூடாதவற்றைச் செய்வதும் தவறு என்பதையே வலியுறுத்துகிறார். அதன்படி, மேற்குநாடுகளில் கோவில்களை அமைக்கச் சிந்திக்கும் பெரியோர் சிவனை முன்னிலைப்படுத்தி – சிவனுக்காக – சிவன் கோவில்களை அமைப்பதற்கு முனைப்புக் காட்டாமல் விடுவது செய்யவேண்டிய தம் பணி ஒன்றைச் செய்யாமல் இருக்கின்றார்கள் என்பது என் கண்ணோட்டம். காலங் கடந்தாவது, ஆக்கப்பூர்வமாக – அறிவுப்பூர்வமாகச் சிந்திப்பார்கள் என்பது என் நம்பிக்கை.

முஸ்லிம் மதத்தவர்கள் தம் மதத்தில் அல்லாவிற்கு முதல் மரியாதை, சீக்கிய இனம் தம் மதத்தின் பிரதம குரு – குரு நானக்கிற்கு முதல் மரியாதை, கிறிஸ்தவர்கள் யேசு பிரானுக்கு முதல் மரியாதை கொடுத்துப் போற்றுகிறார்கள். சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் சிக்காகோவில் சமய நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோது, தான் ஒரு இந்துவாக இருப்பதில் பெருமை கொள்வதாகக் கூறியிருந்தார். இந்து மதத்தின் முப்பெரும் கூறுகளில் மூத்ததும் – மிகத் தொன்மை வாய்ந்ததுமான சைவத்தின் தவப்புதல்வர்களாகிய தமிழினம், நாமும் சைவத்தின் முழுமுதற் கடவுகள் சிவனை முன்னிலைப்படுத்திப் பெருமை கொள்வோம்.

"மேன்மைகொள் சைவநீதி – விளங்குக உலகம் எல்லாம்"

# கவனிக்க...








இங்கு இரண்டு புத்தகங்களின் அட்டை வாசகர்கள் பார்வைக்கு பிரசுரித்துள்ளோம் முகப்பில் திருக்கோணமலை கோயில் வெளியிட்டுள்ள தமிழ் சொல்முறையே சரியானது. இலண்டன் கோயில் நிர்வாகத்தினர் திருக்கோணமலை கோயில் நிர்வாகத்திடம் தமிழ் பயின்றால் நன்றாக இருக்கும்

## லண்டன் வாழ் சைவ பெருமக்களின் கவனத்திற்கு

ஞாயிற்றுக் கிழமைகளில் தேர் தரிசனம் செய்வதால் எவ்வித பலனும் கிடைக்காது. குரைடன் சக்தி கணபதி கோயிலில் ஆவணி சதுர்த்தியில் தேர் ஓடுகிறது.

அதை தரித்தால் பலன் கிடைக்கும்.



# ஆரோக்கியமான சில உணவு வகைகள்

சைலேந்திர பாபு

இயற்கையாக கார்போஹைட்ரேட் அடங்கியுள்ள தானியங்கள், கிழங்கு வகைகள் இவற்றைத் தேர்ந்தெடுத்து உண்ணலாம். சர்க்கரையை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

ஆட்டிறைச்சி அல்லது மாட்டிறைச்சி உண்பதைத் தவிர்த்து, மீன் அல்லது கோழி இறைச்சி உண்ணலாம். மீனில் ஒமேகா3 என்ற கொழுப்பு அமிலம் உள்ளது. இது நல்ல ரக கொழுப்பாகும். இது இதயத் தமனிகளில் கொழுப்பு படிவதைத் தடுக்கிறது.

நெய், வெண்ணெய், ஐஸ்கிரீம் ஆகியவைகளை முழுவது மாக தவிர்க்க வேண்டும்.

பொரித்த உணவு உண்பதை விட வேகவைத்த உணவு உண்ணலாம். முட்டை உண்ண வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டால் அதை ஆம்லேட்டாக உண்பதை விட வேக வைத்து உண்ணலாம். அதைப் போல இறைச்சி மற்றும் மீன்வகைகளை பொரிப்பதற்கு பதில் வேக வைத்து உண்ணலாம். இதன் மூலம் அதிக அளவிலான கொழுப்பு உடலில் சென்று தேங்குவதைத் தவிர்க்கலாம்.

பீசா, பர்க்கர் போன்றஃபாஸ்ட் புட் உணவுகள் அதிக கொழுப்பு அடங்கிய உணவுகளாகும். இவற்றைத் தவிர்க்க வேண்டும்.

உணவில் பழவகைகள் மற்றும் பச்சைக் காய்கறிகளை தாராளமாகச் சேர்க்க வேண்டும். வாழைப்பழம் ஒரு நல்ல உணவு. ஆனால், அதிக எடை உள்ளவர்கள் வாழைப் பழத்திற்குப் பதில் ஆப்பிள் சாப்பிடலாம். உடல் எடை குறைக்க முற்படும் உங்களைப் பழங்கள் சாப்பிடக் கூடாது என்று சொல்லவில்லை. ஊட்டச்சத்து நிறைந்த பழங்கள் நமது உணவில் மிகவும் முக்கிய மானது. எனவே அதிக கலோரிகள் கொண்ட வாழைப்பழத்திற்குப் பதில் குறைந்த கலோரி கொண்ட ஆப்பிள் பழம்

அல்லது ஆரஞ்சுப் பழம் சாப்பிடலாம். உடல் எடை குறைந்ததும் வாழைப்பழம் தாராளமாகச் சாப்பிடலாம்.

அந்தந்த சீசன்களில் கிடைக்கும் பழங்களான மாம்பழம், பலாப்பழம் போன்றவற்றை உண்ண நேர்ந்தால் ஒரு மாம்பழம் அல்லது மூன்று பலாச்சுளை என்று நிறுத்திக் கொள்ள வேண்டும். சுவைமிக்க பழங்களில் அதிக கலோரிகள் உண்டு என்பதைக் கவனிக்கவும்.

ஒவ்வொரு தடவை உணவு உண்ணும் போதும் வயிறு நிரம்பினால்தான் சாப்பிட்ட மாதிரி ஒரு திருப்தி. ஆனால், அது உடல் பருமனாவதற்குக் காரண மாகிறது. எனவே உணவிற்கு முன்னதாக ஒரு ஆப்பிள், வெள்ளரிக்காய், தக்காளி மற்றும் வெங்காயத்தைச் சாப்பிடுங்கள். வயிறு பாதி நிரம்பிவிடும். பின்னர் மற்றஉணவைக் குறைவாக உட்கொண்டால் கூட வயிறு நிரம்பிய உணர்வு ஏற்படும். ஆப்பிள், வெள்ளரிக்காய், வெங்காயம் மற்றும் தக்காளியில் கலோரிகள் மிக மிகக் குறைவு என்பதை உணருங்கள்.

பிரபலமான குளிர்பானங்களில் கலந்துள்ள சர்க்கரை மற்றும் பலவித வேதிப் பொருட்கள் நச்சுத்தன்மை வாய்ந்தவை. அவைகளைத் தவிர்த்து இளநீர், உப்பிட்ட எலுமிச்சஞ்சாறு அல்லது சர்க்கரை இடாத பழரசம் ஆகியவற்றைஅருந்தலாம். இளநீரைக் குடித்துப் பழகுங்கள், பின்னர் குளிர்பானங்கள் மீது வெறுப்பு ஏற்படும்.

பழச்சாற்றில் சர்க்கரை போடவே கூடாது. இன்னும் சொல்லப்போனால் பழங்களை இயற்கையாகவே சாப்பிடுவது நல்லது. பப்பாளி, கொய்யா, தர்பூசணி, ஆரஞ்சு, ஆப்பிள், மாதுளை முதலிய பழங்களை அப்படியே சாப்பிடலாம்.

வீடுகளில் பயன்படுத்தும் சமையல் எண்ணெயின் அளவைக் குறைத்துவிடலாம். நான்கு பேர் கொண்ட எங்கள் வீட்டில் மாதம் இரண்டு லிட்டர் எண்ணெய்தான் பயன்படுத்துகிறோம். (எங்கள் வீட்டிலும் வாரம் ஒருமுறை ஒரு விருந்தினராவது வருவதுண்டு).

உப்பின் அளவைக் குறைக்க வேண்டும். ஒரு நாளைக்கு 2 கிராம் சோடியம்தான் (6 கிராம் உப்பு) தேவைப்படுகிறது. இது உண்ணும் உணவில் இயற்கையாகவே உள்ளது. வெள்ளை உப்பு தேவையற்றஒன்றாகும். இது மிகவும் ஊறுவிளைவிக்கக்கூடியது.

கடலை வகைகளில் எல்லா ஊட்டச் சத்துகள் இருப்பதாலும், ஒமெகா 3 கொழுப்பு அமிலம் இருப்பதாலும் இது மிகவும் ஆரோக்கியமான உணவாகும். வேர்க்கடலை, முந்திரிப்பருப்பு, பாதாம் பருப்பு, பிஸ்தா போன்றவை நல்ல சத்தான உணவுதான். ஆனால், இவற்றில் அதிக கலோரிகள் இருப்பதால் இவற்றைக் குறைவாகவே உண்ணுதல் வேண்டும்.

மிதமான உணவு

நான் பத்தாவது படிக்கும்போது எங்களது தலைமை ஆசிரியர் திரு. முகமது இஸ்மாயில் என்பவர் காலை இறைவணக்கத்தின் போது, உண்ண வேண்டிய உணவின் அளவு பற்றி கூறிய அறிவுரை இன்னும் என் மனதில் இருக்கிறது.

அரைவயிறு உணவு;

கால் வயிறு தண்ணீர்

கால் வயிறு வெற்றிடம்

எவ்வளவு பெரிய தத்துவம் பாருங்கள்! கேள்விப்பட்டு 28 ஆண்டுகள் ஆகிவிட்டன.

எனது பள்ளித் தலைமை ஆசிரியரின் அறிவுரையை ஏற்று அதன்படி நடந்தால் என்றும் உடல் எடை ஏறாது. வயிற்றில் கொஞ்சம் வெற்றிடம் வைத்து விட்டால், மூச்சு விடுவதும் சுலபமாக இருக்கும். ஜீரணக் கோளாறு, வயிறு 'மந்தமாக' இருக்கிறது என்று மருத்துவரை நாட வேண்டியிருக்காது.

■

# கல்யாணக் காட்சிகள்



கடந்த சில ஆண்டுகளுக்குள் தொழில்நுட்பம் மிகவும் வளர்ந்துவிட்டது. அதனாலே தொடர்பு கொள்ளுதல், செய்திகளைப் பகிர்தல், உறவுகளுடன் உறவாடல், நட்பு வட்டங்களை வளர்த்தல் எனப் பல கருமங்கள் இலகுவாகிவிட்டன. அண்மையில் ஒரு மின்னம்பலத்தில் திருமணம் ஒன்றில் நடந்த நிகழ்வைப் பார்த்தேன். மணப்பெண் ஆண்கள் புடைசூழ நடனமாடியபடியே மணமேடைக்கு வந்தார். அதுவும் திரைப்படங்களிலே வருவதுபோல, கையில் ஒரு மாலையுடன், திரைப்படப் பாடல் ஒன்றுக்கு ஆடியபடியே வந்தார். இது உண்மையான திருமணமா அல்லது வேடிக்கையாக யாராவது படம்பிடித்தார்களா என்ற சந்தேகம் மனத்தைவிட்டு இன்னும் நீங்கவில்லை.

இன்னொரு கல்யாணத்தில் மணமகனுக்கோ மணமகளுக்கோ நண்பரான இரு ஆங்கில இனப் பெண்கள் அழகாகச் சேலைகட்டி, குட்டையான தலைமுடியை அழகாகக் கட்டி வந்திருந்தார்கள். தமிழ்க் கலாசாரம் அவர்களின் தோற்றத்திலே பிரதிபலித்தது. திருமண அமைப்பாளர்கள் வந்த பெண்களுக்கு மல்லிகை மாலை கொடுத்தார்கள். இந்த ஆங்கிலப் பெண்களுக்கும் கொடுத்தார்கள். கையிலே வாங்கி, அதை என்ன செய்வது, மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, இருவரும் தத்தம் தலையிலே வைத்துப் படமும் எடுத்துக்கொண்டார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் இருந்த தமிழ்ப் பெண்? இசுலாமிய உடையில் வந்திருந்தார், சேலையும் கட்டவில்லை, தலையையும் முடியவில்லை, பூவையும் வேண்டாம் என்று வாங்க மறுத்துவிட்டார். ஆனால் நெற்றியிலே மட்டும் குங்குமம் இருந்தது.

புதிதாகத் திருமணமான ஒரு பெண் அடுத்து இரு வாரங்களுக்குள் நடந்த தன் நண்பியின் திருமணத்துக்குத் தன் கணவருடன் வந்திருந்தார். அவரின் கழுத்தில் தாலி இல்லை. ஒரு மூதாட்டி அதை அவரிடமே கேட்டுவிட்டார். உடுத்த புடைவைக்கும் ஏனைய நகைகளுக்கும் பொருந்தவில்லை என்பதால் வீட்டிலே கழற்றிவைத்துள்ளேன் என்று பதில் வந்தது.

தாலி கட்டியவுடன் தம்பதியர் அக்கினியை வலம்வந்து வணங்கிக்கொண்டிருந்தர். வியர்வை காரணமாகப் பெண்ணின் நெற்றியில் இருந்த குங்குமம் சிறிது கீழே வழிந்து கோடாகத் தெரிந்தது. திருமணத்தைப் படமாக்கிக்கொண்டு இருந்தவருக்கு அது உறுத்தியது. பெண்ணைப் பார்த்து, 'குங்குமத்தைக் கொஞ்சம் அழிக்கிறீர்களா?' என்று கேட்டார். திருமணம் நடத்திக்கொண்டிருந்த



சிவாசாரியர் காதிலே இது விழுந்தது. அவ்வளவுதான். அடுத்த இரு நிமிடங்கள் படப்பிடிப்பாளரைப் பக்கத்தில் அழைத்து, சிவாசாரியர் சில மந்திரத்தை அவர் காதில் ஓதினார். படப்பிடிப்பாளர் தன் வாழ்க்கையில் அப்படியொரு வார்த்தையை எங்குமே மீண்டும் சொல்லமாட்டார் என்று நம்பலாம்.

திருமணச்சடங்கு முடிந்தவுடன் தம்பதியை ஆசீர்வதிக்க மணமேடை செல்வார்கள். பலரும் காலணிகளைக் கழற்றாமலே செல்வார்கள். ஆசி வழங்கும்போது காலணி அணியலாமா என்றார் அன்பர் ஒருவர். திருமணமே சைவமுறைப்படி நடைபெறுவதில்லையே! பின் எப்படி ஆசீர்வதித்தால் என்ன என்றார் அதற்குப் பதிலளித்தவர். மணமக்கள் விரதம் இருப்பது, காலையில் தலையிற் பால் வைத்துக் குளிப்பது, பெரியோர் ஆசீர்வாதத்துடன் புறப்படுவது, திருமணம் முடிந்தவுடன் கோயில் செல்வது என்று எதுவுமே இல்லையே என்பது அவர் வாதம். அது மட்டுமா? அன்றிரவே கடவுள் சிந்தனையோடு வாழ்க்கையை யாரும் தொடங்குவதேயில்லை. வரவேற்பு என்ற பெயரில் விடியும்வரை கொண்டாடிவிட்டு எங்கோ ஒரு விடுதிக்குத்தானே போகிறார்கள் என்று மேலும் பொங்கினார் அவர்.

திருமணம் என்பது இருவர் தம் வாழ்க்கைப் பாதையிலே முதற் காலடி எடுத்துவைக்கும் புனிதமான சடங்கு. அதை இப்போது யாரும் பின்பற்றுவதாகத் தெரியவில்லை. சில கிரியைகள், சில சம்பிரதாயங்கள் பின்பற்றாமலே மறைந்து போகின்றன. இந்தக் காலத்துக்கு இவையெல்லாம் தேவையா? இவையெல்லாம் சாத்தியமா? என்று பல கேள்விகள் ஒருபுறம். அவற்றையெல்லாம் மூடநம்பிக்கை, தேவையற்றது, இங்கு செய்ய முடியாது என்றெல்லாம் பலப்பல காரணங்கள் சொல்லி மூடிவைப்பது இன்னொருபுறமென்று ஆரம்பித்துவிட்டோம். மாறாக, கேக் வெட்டுவது, களியாட்டம் வைப்பது என்று மேற்கு நாடுகளின் நாகரிகத்தை நாம் கொஞ்சம் கொஞ்சமாக புகுத்தி நம் கலாசாரத்தை மறந்துவரத் தொடங்கிவிட்டோம். பிள்ளைகள் விரும்புகிறார்கள், பிள்ளைகளுடைய வாழ்க்கை, பிள்ளைகளுடைய விருப்பத்துக்கு விடவேண்டும் என்று ஒரு விவாதமும் வைக்கப்படுகிறது. நம் மூதாதையர் முட்டாள்கள், அவர்கள் செய்தவை இந்தக் காலத்துக்குப் பொருந்தா, விஞ்ஞான ரீதியாக விளங்கப்படுத்த முடியாது என்று பல கருத்துக்கள் வெளிவருகின்றன. படம் எடுப்பதும், காட்சிப்படுத்துவதும், நம் வசதியை மற்றவர்களுக்குப் பறைசாற்றுவதும், நாலுபேர் புகழ்ந்து பேசும்படி நடக்கவேண்டும் என்பதும் கிரியைகள், சமயச்சடங்குகளைவிட முக்கியமானவையாக இடம்பிடிக்கத் தொடங்கிவிட்டன.

காலத்தின் கோலமா, அல்லது காலத்தின் கோலம் என்று காரணங்காட்டி நம்முள் மறைந்துள்ள ஆசைகளை இப்படி நாம் வெளியே கொண்டுவருகின்றோமா, நாடுகடந்து வந்த காரணத்தால் நாடகம் போடுகிறோமா என்று பல கேள்விகள். பதில்தான் இல்லை.



# எது சரி எது பிழை

சிவனுக்கு சக்தி உமை. திருமாலின் சக்தி பாமா, ருக்மணி. பிரம்மாவுக்கு சரஸ்வதி. விநாயகருக்கு வல்லவை, அம்பிகை என்று உண்டு. அதுபோல முருகனுக்கு தேவயானை, வள்ளி என்று சக்திகள். வேலையும் முருகனின் சக்தி என்றே சொல்லப்படுகிறது. வள்ளி, தெய்வயானை இச்சா, கிரியா சக்திகள் என்றும் வேல் ஞானசக்தி என்றும் ஆன்றோர் கூறுகின்றனர். கோயில்கள் அமைக்கும்போது அந்தந்தத் தெய்வங்களுக்கு அந்தந்த சக்திகளுடன் திருவுருவம் அமைத்து வழிபடுவது சாலச் சிறந்தது.

உலகத்திலே பல நாடுகளில் சைவர்கள் வாழ்வதால் முருகனுக்குக் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. ஆனால் திருமுருகாற்றுப்படையிலே நக்கீரர் பாடிய ஆறு திருக்கோயில்கள் மிகச் சிறப்பானவை. திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, பழமுதிர்சோலை, திருத்தணி, திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களிலே இந்தக் கோயில்கள் அமைந்துள்ளன. அந்த ஆறு கோயில்களிலும் முருகன் ஆறு விதமாகப் பத்தர்களுக்கு அழகாகக் காட்சியளிக்கிறார். ஆனால் எந்தக் கோயிலிலும் வேல் மட்டும் தனியாக வழிபாட்டுக்கு வைக்கவில்லை.

யாழ்ப்பாணத்திலே நல்லூர் முருகன் கோயில் பிரபலமானது. அங்கே வேலை மூலவராக வைத்து வணங்குகிறார்கள். இதை ஆறுமுகநாவலர் அவர்கள் மிகவும் கண்டித்தார்கள் என்றும் அந்தக் கோயிலுக்குப் போவதைத் தவிர்த்தார் என்றும் அந்த நாளில் இருந்தவர்கள் சொன்னதாக அறிகிறோம். சிவாகம முறையிலே கோயில் அமைப்பதானால் முருகனுக்குப் பக்கத்திலே மட்டுமே வள்ளி, தேவயானையை வைத்து வழிபடலாம். வேலுக்குப் பக்கத்திலே வள்ளி, தேவயானையை வைப்பது தவறானது. முருகனை விட்டுவிட்டு முருகனின் சக்தியை மட்டும் வழிபடுவதுபோல இது அமைந்துவிடும். ஒரு முதியவரின் கைத்தடியை அவர் இருக்கும்போதே நாம் அந்த முதியவராகக் கருதி அவரின் மனைவியைப் பக்கத்திலே இருத்துவதுபோல இது ஆகிவிடும்.

நாம் ஒன்றைச் செய்யும்போது எது சரி, எது பிழை என்று நன்றாக ஆராய்ந்து, அறிந்த பெரியவர்களிடம் கேட்டு சரியானதையே செய்யவேண்டும். முக்கியமாக, திருக்கோயில் அமைத்தல், சமய வழிபாடு செய்தல் போன்றவற்றிலே பிழையாகச் செய்தால் அதன் பலனை நாமும் எம்முடைய அடுத்த சந்ததியும் அனுபவிக்கவேண்டி வரும். முன்னரே இருக்கும் பிழையான உதாரணங்களைக் காட்டி இப்போதும் அதே பிழை விடுவது தவறு. சரியான வழி தேடி, சரியான பாதையிலே போவதே நாட்டுக்கும் நமக்கும் நல்லது.

# அய்யன் திருவள்ளுவர் தமிழ் மன்றம்

## வழங்கும்

# மாதம் இரண்டு திருக்குறள்

அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு.

உடனிருப்போரிடம்
அன்பு இல்லாமல்,
வலிமையான துணையுமில்லாமல்,
தானும் வலிமையற்றிருக்கும்போது
பகையை எப்படி வெல்ல முடியும்?


வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை.

மெலியோரை விடுத்து,
வலியோரை எதிர்த்துப்
போரிட விரும்புவதே
பகைமாட்சி எனப் போற்றப்படும்.




இந்தத் திருக்குறள் நூலை லண்டனில் பெற
தமிழர் தகவல் இதழைத் தொடர்புக்கொள்ளுங்கள்


**விலை. 2 பவுண்ட் மட்டும்**


Best Food
11-13 Ealing Road Wembley
Middlesex HAO 4AA Tel : 0208 9000100
364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002, Fax : 020 8570 2323
259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269, Fax : 684 4677
எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும
அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று மலிவு விலை
பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை
சேமியுங்கள்


நாழிகை
International Tamil Newsmagazine
டாக்டர் எஸ். செளமியா
இசைப் பேரின்பம்
கருநாடக இசையில் தனித்துவமான பாடகி
ஆர். கே. ஸ்ரீராம்குமார் - வயலின்
பூங்குளம் சுப்பிரமணியம் - மிருதங்கம்
Dr S Sowmya
RHAPSODY
A unique vocalist in Carnatic Music
R K Shriramkumar - Violin
Poongulam Subramaniam - Mridangam
Tickets: £50.00, £25.00, £15.00
Watersmeet Theatre, High Street
Rickmansworth, Hertfordshire, WD3 1EH
13 September 2014
Saturday at 6:30 pm - (Doors open at 6.00 pm)
Contacts: pannews@hotmail.co.uk ● 020-8422 5699 / 07939 313195 ●
Contacts: pannews@hotmail.co.uk ● 020-8422 5699 / 07939 313195 ●



Athavan TV
24 Hour Tamil Channel
Drama | Movies | Music | News | Sports | Live Events | Religion | Life Style
Free Channel
Satellite: (Eurobird 9a)
Freq: 11843
Vertical Symbol Rate: 27500
FEC – ¾
நம்ம நட்சத்திரங்களின் அணிவகுப்பு
Monday to Friday 8.30 PM
Sunday 9.00 PM
மேளம் கொட்டு தாலி கட்டு
Saturday 8.00 PM
Monday to Friday 6.00 PM
Monday to Friday 8.00 PM
மல்லி
Monday to Friday 6.30 PM
Latest Movies
Daily 2.00 PM
Sunday 11.00 AM
Monday to Friday 5.00 PM
NEWS UPDATE
BREAKING NEWS
News That's Making News!
8AM 1PM 7PM
விளம்பர தொடர்புகளுக்கு
UNITED KINGDOM 0203 318 2004
FRANCE 097 518 0123
ITALY 0247 921 666
GERMANY 0305 6837 0039
SWITZERLAND 0435 082 375
SWEDAN 085 250 0208
WWW.ATHAVAN.TV




இலண்டனில் தரமான தங்கத்திற்கு
PATHMINI
JEWELLERS
22ct GOLD
892 London Road
Thornton Heath
Surrey CR7 7PB
Tel : 020 8665 1111
Fax : 020 8664 8999




ஹூசியத்தில் முதலாவது
தமிழ்க்கடை
கற்பகம்
தங்கள் சேவையை
விரிவாக்கியுள்ளார்கள்
KATPAGAM
36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 694 88 10
உடன் காய்கறிகள்
பழவகைகள், இறைச்சி,
தமிழ் ஆடியோ, வீடியோ
தமிழ்படங்கள் அனைத்தும்
ஒரே இடத்தில்




எவரஸ்ட்
24 Loampit Hill
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233
அசத்தலான
அசைவ சுவைக்கு
Breakfast Lunch Dinner

Anthoorium
World of Designs
Jewellery & Textiles
102, B Burlington Road
New Malden, Surrey KT3 4NT
Tel : 020 8942 8001 Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk Email : sales@anthoorium.co.uk



AYNGARAN INTERNATIONAL
PROUDLY PRESENTS
FOR CONTACT : 0140360612 - 0142095515
0603774714 - 0141699425, 0699575151
ANJAAN
AUGUST RELEASE
WORLDWIDE
STARRING :
SURYA, SAMANTHA
VIDYUT JAMWAL,
MANOJ BAJPAI
SOORI
DIRECTION:
N. LINGUSAMY
MUSIC:
YUVAN SHANKAR RAJA
சூர்யா
நடிக்கும்
N.லிங்குசாமி-யின்
அஞ்சான்
யுவன் ஷங்கர் ராஜா - சந்தோஷ் சிவன்
JOIN US ON
YouTube www.youtube.com/ayngaran
www.facebook.com/ayngaran
visit us: www.ayngaran.com

**BEST BUY**




# 2 FOR £ 2.50

*On Your Way*

**Best Foods**

SUPERMARKET

90 years of silk heritage
RmKV Wedding Silks
handcrafted
Silks of India

panagal park **chennai**
brooke bond rd **coimbatore**
vannarpettai **tirunelveli**
toll free no **1800 425 3105**
(applicable within India only from 10am to 9pm)
**sms Bridal7 to 53636**
email **silks@rmkv.com**
**www.facebook.com/RmkvSilks**
purchase online **at www.rmkv.com**




AYURVEDA
VAANI Foods
100% NATURAL
Amla Juice
Karela Juice
CONTAINS NO ARTIFICIAL COLOR & FLAVOUR
Gulab Sharbat
With Natural Rose Flavour
Aloe Vera Juice
CONTAINS NO ARTIFICIAL COLOR & FLAVOUR
Amla Squash
Enriched with Ginger
NEW IN STORES


Lycamobile
Call the world for less
Special international rates with UK plan to over 75 countries
Sri Lanka
3p /min
Landline + Mobile
£10 a month
500 UK Minutes
1GB Data 4G
Unlimited UK Texts
Lyca to Lyca Unlimited Calls & texts
To buy: Text 11044 to 3535
Order your free SIM at www.lycamobile.co.uk
or call 020 7132 0322
Top-up your SIM online or where you see the following signs:
TESCO Sainsbury's ASDA WHSmith Martin McColl
Lyca mobile
Call the world for less